தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 64 மலர் 1

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — சித்திரை மலர் : 1

ஏப்பிரல்—மே—1990

உள்ளுறை பக்கம்

1. *சங்கச் சமுதாய மாற்றமும் நடுகல் வழிபாடும்* 2
பெ. மாதையன்

2. *தஸ்தயேவஸ்கியின் கதாபாத்திரங்கள் (ஒரு உளவியல் பார்வை)* 10
ஐ. சிவசுப்ரமணியஜெயசேகர், எம்.பி, பி.எஸ்,

3. *வஞ்சிக் காண்டம் - ஓர் ஆய்வு* 13
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
எம். மருதமுத்து

4. *காரைக்கால் பிரெஞ்சு விடுதலைப் போராட்ட அமைப்புகள்* 16
ஆ. விஜயராணி, எம்.ஏ., எம்ஃபில்.,

5. *பிரபஞ்சன் சிறுகதைகள்* 29
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம்.ஏ, பி.டி., எம்.பில்., பிஎச்.டி.,

6. *தமிழ் மொழியாய்வுப் பணியில் கணிப்பொறி* 34
க. அன்பழகன், எம்.ஏ., (எம்ஃபில்)

7. *திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு* 43
(சென்ற இதழ் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில்.,

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
(முன்னாள்) செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை,
சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம் ஏ எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
சென்னை.

,, முனைவர், ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம் ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ. பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி

,, பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச். டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

சங்கச் சமுதாய மாற்றமும் நடுகல் வழிபாடும்

பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

முன்னுரை :

வீரவணக்கம் என்பது சங்க இனக்குழுச் சமூகத்தில் மிகு வழக்குடைய முனைப்பான வழிபாட்டு முறையாய் இருந்து வந்திருக்கின்றது. மாடுபிடி சண்டையில் இறந்துபட்டவர்க்கு நடப்பட்ட நடுகற்களே இவ்வீரவழிபாட்டிற்கான தெய்வ உருக்களாய் இருந்திருக்கின்றன. சங்க காலம் குழு வாழ்வு முறையின் அழிவுகளையும் தனியுடைமைகளின் தோற்றத்தையும் மருத வாழ்வை அடிப்படையாய்க் கொண்டு அரசுகள் தோற்றம் பெற்றதையும் காட்டும் மாறுதல் காலக்கட்டமாயுள்ளது. இத்தகு சமூக மாற்றம் நடுகல்நாட்டல், அதன் அடிப்படையிலான வீரவணக்க வழிபாடு, கல் நாட்டலின் நோக்கம் போன்றவற்றிலும் சில மாறுபாடுகளைத் தோற்றுவித்துள்ளது. சங்கச் சமூக மாற்றம் நடுகல் வழிபாட்டில் ஏற்படுத்திய இம் மாற்றங்களைச் சங்கஇலக்கியச் சான்றுகள் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மாடுபிடி சண்டையும் வீரர் நடுகற்களும் :

பண்டைய இனக்குழுச் சமுதாயத்தில் வீரமே சமுதாய நலம் பேணும் சமூக உடைமைகளைப் பேணும் ஆதாரமாய் இருந்தது. இச் சமுதாயச் செல்வமாய் இருந்த ஆநிரை போர்க்குக் காரணமாய் அமைந்தது. இச்சமுதாயங்களில் இவற்றைக் கவர்வதும் மீட்பதுமான வெட்சி கரந்தைப் போர்கள் மட்டுமே நிகழ்ந்தன. இப்போர் அச்சமுதாயப் போராகையால் அதில் இறந்துபட்டவர் அனைவருமே அச்சமுதாயத்தினரால் மதிக்கப் பட்டனர். தமது பொது உடைமையைக் காத்த அவ்வீரர்கள் தெய்வங்களாய்த் தம்மோடு என்றும் வாழ்வதாய்க் கருதினர். போரில்பட்ட அனைவருக்கும் கல்நாட்டி வழிபட்டனர். இதைச் சில புறப்பாடல்களும் அகப்பாடல்களும் தெளிவுபடுத்துகின்றன.

'நிரம்பா நோக்கின் நிரயங் கொண்மார்
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடு மெழுதி யதர் தொறும்

பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
மொழி பெயர் தேஎம்'

(அகம் 67; 6- 12)

"வீளை யம்பின் விழுத்தொடை மழவர்
நானா வுய்த்து நாம வெஞ்சுரந்து
நடை மெலிந். தொழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி யுகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர் தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை"

(அகம். 131 : 6 - 12)

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல்லன்ன விழுப் பிணர்ப்
பெருங்கை யானை"

(ஐங்குறுநூறு 352 ; 1 - 3)

இப்பாடல்கள் அனைத்துமே வேந்தச் சமூகத் தாக்கம் ஏற்படா இனக்குழுச்சமூகத்தில் நிகழ்ந்த நடுகல் மற்றும் வீர வணக்க நிலைகளைத் தெளிவாக்குகின்றன. போரில் இறந்த வீரர் அனைவருக்குமே கல் நடப்பட்ட தன்மையை மறவர் நடுகல், ஆடவர் நடுகல், தொலைந்தோர் நடுகல் என்பன உரைக்கின்றன. மாடே சமூக உடைமையாய் இருந்த சமுதாயத்தில் மாடுபிடி சண்டையில் பட்டோர்க்குக் கல் நடப்பட்ட நிலையையும் இப்பாடல்கள் உரைக்கின்றன.

இப்பாடல்களில் அகப்பாடல் இரண்டும் தலைவனின் பொருள்வயின் பிரிவைச் சுட்டுவனவாயுள்ளன. மேலும் அதர்தொறும் நடுகல் இருந்ததைச் சுட்டுவதாலும் வேற்று முனை பற்றிய செய்திகள் இப்பாடல்களில் சுட்டப்படுவதாலும் இவை வேந்தரின் மருதநிலச் சமுதாய வளர்ச்சிநிலைக் கால கட்டப் பாடல்களாய் இருத்தல் வேண்டும். பொருள்வயின் பிரியும் அச்சமுதாயக் காதல்தலைவன் செல்லும் வழியில் இருந்த, மாடுபிடி சண்டை நிலவிய குழுச் சமுதாயங்களை இப்பாடல்கள் சுட்டுவதால் இவை சங்கச்சமூக மாறுதல் காலக்கட்டப் பாடல்கள் என்பது தெளிவாகின்றது.

சீறூர்த் தலைவரும் நடுகற்களும் :

இனக்குழுச் சமுதாய எச்சமாய் இருந்த வன்புலச் சமுதாயத் தலைவர்களான சீறூர்மன்னர் சமுதாயத்தில் நடுகல் வழிபாடு

பெரிதும் கைக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இதற்குப் புறநானூற்றுப் பாடல்கள் பல சான்றாகின்றன. வேந்தர் சமுதாயத் தொடர்பு இங்கே புகத் தலைப்பட்ட சூழலில் மாடு பிடி சண்டைகள் மட்டுமல்ல வேந்துவிடு தொழில் தொடர்பான போர்களும் நிகழ்ந்திருக்கின்றன. மாடுபிடி சண்டை சமூக உடைமை பேணும் போராக இருக்க, வேந்துவிடு தொழிலோ வேந்தர் சமுதாய மருதநில வளர்ச்சிக்கும் சீறூர் மன்னர் வீரம் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட நிலையதாய் உள்ளது. எனினும் இவ்விரு வகைப் போர்களும் கல் நாட்டலுக்குக் காரணமாகி யிருக்கின்றன.

“பல்லாத் திரணிரை பெயர்த்தரப் பெயர்தந்து
கல்லா விளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே”

(புறம். 238 : 5-8)

“அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனிநட் டனரே கல்லுங் கன்றொடு
கறவை தந்து பகைவ ரோட்டிய
நெடுந்தகை கழிந்தமை யறியா
தின்றும் வருங்கொல் பாணரது கடும்பே”

(புறம் 264 : 3-7)

இப்பாடல்கள் மாடுபிடி சண்டையில் இறத்துபட்ட தலைவர்க்கு மட்டுமே கல்நடப்பட்டதை உரைக்கின்றன.

வேந்துவிடு தொழில் இனக்குழுச் சமுதாய வாழ்வு நிலைகளிலும் சில மாற்றங்கள் நிகழ்வதற்குக் காரணமாய் அமைகின்றது. வன்புலச் சமுதாயங்களைப் பொறுத்தமட்டில் வேந்துவிடுதொழில் என்பது அச்சமுதாய வாழ்வுக்கு அச்சமுதாய நலம் பேணலுக்கு ஒரு வழியாய்க் கைக்கொள்ளப் பட்டிருக்கின்றது. பிறருக்கென மேற்கொண்ட இப்போரில் களிறெறிந்து வீழ்ந்தோர்க்கும் நடுகல் நடும் மரபு கைக்கொள்ளப் பெற்றிருக்கின்றது.

“ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
... ...”

(புறம் 335 : 9-11).

" பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யிளையே கடுமான் தோன்றல்
வானேறு புரையுநின் றாணிழல் வாழ்க்கைப்
பரிசிலர் செல்வ மன்றியும் விரிதார்க்
கடும்பகட் டியானை வேந்தர்
ஒடுங்கா வென்றியு நின்னொடு செலவே "

(புறம் 265 : 4-9)

வேந்துவிடு தொழிலும் களிறெறிந்து வீழ்தலும் நடுகல் நாட்டலுக்குக் காரணமாய் அமைந்து விடுதலை இவ்விரு பாடல் களும் விளக்குகின்றன. இத்தகைய வேந்தர் சமுதாயத் தொடர்பு நடுகல் வழிபாட்டில் அவர்கள் கைக்கொண்டிருந்த சில நம்பிக்கைகளிலும் சில மாற்றங்கள் புகுதற்கும் நேர்தற்கும் காரணமாகி விடுகின்றது. இதனைப் பின்வரும் பாடல் காட்டுகின்றது.

" வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த வுரைய னாகி
... ...
அரிது செல் லுலகிற் சென்றன னுடம்பே
... ...
அம்பொடு துளங்கி யாண்டொழிந் தன்றே
உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சான் மஞ்ஞை யணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர்க் கன்மிசை யதுவே "

(புறம் 260 : 16-28).

போரில் இறந்துபட்ட தம்முன்னோர் கல்லுருவில் தம்மோடு வாழ்ந்து தம்மை ஆற்றுப்படுத்துவதாய்க் கருதிவந்த நம்பிக்கை யில் மாற்றம் நிகழ்கின்றது. உடம்பொடும் உயிரொடும் தம்மோடு வாழ்வதாய்க் கருதும் நிலையில் உடம்பு இவ்வுலகத்தே அழிய உயிர் அரிதுசெல் உலகாகிய வானுலகம் புகுந்தது எனும் வீரசுவர்க்கக் கோட்பாடு புகுகின்றது. எனினும் பீலிசூட்டி வழிபடும் நடுகல் வழிபாட்டில் மாற்றம் நிகழவில்லை.

வன்புலச் சமுதாயங்களில் போருக்கான நோக்கங்களிலும் போர் முறைகளிலும் மாற்றங்கள் புகுந்த போதிலும் நடுகல்

நடுதலிலோ அதனை வழிபடுவதிலோ மாற்றம் ஏதும் நிகழ வில்லை. எனினும் போரில் பட்ட வீரர் அனைவருக்குமின்றி அவ்வூர்க் குடியாக இருந்து ஊர்நலம் பேணிய தலைவருக்கு மட்டுமே கற்கள் நடப்பட்ட நிலையைத் தான் இப்பாடல்கள் காட்டுகின்றன. இதனை ஒத்த நிலையில் கொடைப்பண்பு பெரிதும் போற்றப்பட்ட குறுநிலமன்னர் சமுதாயங்களில் வீரர்க்குக் கல் நடப்பட்ட செய்தி எங்கும் பேசப்படவில்லை. எனினும் ஔவையாரின் பாடலொன்று (புறம் 232) அதியனுக்குக் கல் நடப்பட்ட செய்தியைச் சுட்டுகின்றது. தலைமை என்பது முன்னிறுத்தப்பட்ட சூழலில் சமுதாயத் தலைவர்க்கு மட்டுமே நடுகல் நடப்பட்ட செய்தியை இப் பாடல்கள் உரைக்கின்றன, என்ற போதிலும் நடுகல் வழிபாடு பழமரபுப்படி தொடர்ந்து கைக்கொள்ளப்பட்டு வந்த நிலையை யும் இப்பாடல்கள் காட்டுகின்றன.

வேந்தரும் நினைவுக் கற்களும் :

வேந்தரின் மருதநிலச் சமுதாயங்களைப் பற்றிய புறப்பாடல் களில் நடுகல் வழிபாட்டு நெறி எங்கும் இடம்பெறவில்லை. ஆனால் கோப்பெருஞ்சோழனைப் பற்றிய பாடல்களில் 221, 223 ஆகிய இரு பாடல்களிலும் இவ்வேந்தன் நடுகல்லான நிலை பேசப்படுகின்றது ஆனால் இங்கே நடுகல் நடப் பட்டமைக்கான பின்னணி என்பது வேறு வகையானது.

உடைமைப் பண்பு மேலோங்கி ஆங்காங்கே அரசு தமக்குரிய இயல்புடன் தோன்றித் தலைப்பட்ட நிலையில் நலங்கிள்ளி நெடுங்கிள்ளி எனும் சோழமன்னர்களுக்கிடையே தோன்றிய உடைமை உரிமைப் போராட்டங்கள் மரபுவழித் தொடர்ந்து நிகழ்கின்றன. 'பால்தர வந்த பழவிறல் 'தாயம்' தூய் வயிற்றி லிற்குது தாயம் எய்துதல் எனும் உடைமை உரிமைப் பண்புகள் தொடர்ந்து மேலோங்குகிறன. இத்தகைய உடைமை உரிமைப் போராட்டம்தான் கோப்பெருஞ்சோழன் நடுகல்லானமைக்கு அடிப்படைக் காரணமாகியது. கோப்பெருஞ்சோழனுக்கும் அவனின் ஆண்மக்களுக்கும் இடையே உடைமை உரிமைப் போராட்டம் நிகழ்கின்றது. இது அவர்களைப் போர்க்கு இட்டுச் சென்ற நிலையில்

"அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயு மற்றவர்க்
கனையை யல்லை யடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ

உயர்ந்தோ ருலக மெய்திப் பின்னும்
ஒழிந்த தாய மவர்க்குரித் தன்றே
... ...
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின் பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுந ருவப்பப் பழியெஞ் சுவையே
... ...
செய்தல் வேண்டுமா னன்றே வானோர்
அரும்பெற லுலகத் தான்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே"

(புறம். 213)

எனும் புல்லாற்று எயிற்றியனாரின் குரல் பெருஞ்செல்வத்தாயம் தொடர்ந்து அக்குடிக்கே உரித்தாய் வழிவழி காக்கப்பட வேண்டும் என்ற நிலையில் ஒலிக்கின்றது. மகன்களுக்கும் தந்தைக்கும் இடையே போர் நிகழ்ந்தால் அது மகன்களின் அழிவுக்கு வழிகோலி விடுமாயின் அரசச் செல்வம் பிறருக்கு உரிமையாகி விடும் என்பதால் மகன்களின் தாயஉரிமை இங்கே வலியுறுத்தப்படுவதுடன் கோப்பெருஞ்சோழனுக்கு அரும் பெறலுலகப் பேற்றுக்கான வழி அறிவுறுத்தப்படுகிறது.

மேற் சுட்டப்பெற்ற நிகழ்வுக்கும் பின்னர் சோழன் வடக்கிருந்து உயிர் துறக்கிறான். இச் செய்தியைத் தான் புறத்தில் 214 முதல் 220 வரையிலான பாடல்கள் குறிப்பிடுகின்றன. இவ்விறப்பின் பின் நடுகல் நடப்பட்ட செய்தியைத்தான் 221, 223 ஆம் பாடல்கள் உரைக்கின்றன. இச்சமுதாயத்தில் நடுகல் நடப்பட்ட செய்தி சுட்டப்பெறுசின்றதே அன்றி வழிபாட்டு நெறி எங்கும் குறிப்பிடப் பெறவில்லை. மாடுபிடி சண்டையில் ஊர் உடைமை பேணியும் வேந்துவிடு தொழிலில் ஈடுபட்டும் வேந்தச் சமுதாய ஆதிக்கப் போரில் தம் சமுதாயத் தலைமையைக் காக்க வேண்டியும் போராடிய வீரர்க்கும், சீறூர் மன்னர்க்கும் குறுநில மன்னர்க்கும் நடப்பட்ட நடுகற்களோ போர் மாண்பினைப் பறைசாற்றும் வீரக்கற்களாய், அச்சமுதாய வழிபடு தெய்வங்களாய் இருந்தநிலை இங்கே மாறிப் போகின்றது. இங்கோ, நடுகல் உடைமை உரிமைப் போராட்டத்தில் வடக்கிருந்து உயிர் துறந்து அரும்பெறல் உலகத்தார்க்கு விருந்தினனான, வீர சுவர்க்கம் புகுந்த மன்னனுக்கு நடப்பட்ட நினைவுச் சின்னமாகிவிடுகின்றது.

முடிவுரை :

மாடு சமுதாய செல்வமாய் உடைமையாய்க் கருதப்பட்ட இலக்குழுச் சமுதாயத்தில் அது தொடர்பான போர் சமுதாய நிகழ்வாய் இருந்து வந்தது. இப்போர்களில் ஈடுபட்டு இறந்தோர் அனைவருக்கும் ஒத்தநிலையில் கல் நடப்பட்ட செய்தியை சில சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

இனக்குழுச் சமுதாய எச்சமாய் இருந்த சீறூர் மன்னர் சமுதாயத்தில் வேந்தர் சமுதாயத் தலையீட்டால் சில மாற்றங் கள் நேர்கின்றன இவ்வன்புலச் சமுதாயப் போரான மாடுபிடி சண்டையோடு வேந்தரின் மருதநிலச் சமுதாய நிலப் பெருக்கத் திற்கான வேந்துவிடு தொழிலும் சீறூர் மன்னரால் கைக்கொள்ளப் பெறுகின்றது. இந்நிலையில் இவ்விருவகைப் போரிலும் இருந்த சமுதாயத் தலைவர்க்கு மட்டுமே கல் நடப்பட்ட செய்தியை சீறூர்மன்னரைப் பற்றிய பாடல்கள் தெளிவாக்குகின்றன. வேந்துவிடு தொழிலால் களிகறறிந்து வீழ்ந்தமையும் கல் நாட்டலுக்குக் காரணமாகின்றது 'வீர சுவர்க்கம் புகுதல்' எனும் கோட்பாடு இங்கேயும் புகுந்த, புகுத்தப்பட்ட சூழலில் நடுகல்வீரர் உடலொடும் உடம்பொடும் தம்மொடு வாழ்வதாய்க் கருதிய நம்பிக்கையிலும் மாற்றம் நிகழ்கிறது உடம்பு போர்க் களத்தே அழிய உயிரோ அரும்பெறல் உலகம் செல்வதான கருத்து புகுகின்றது இத்தகு மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் நடுகல் வீரவணக்கத்திற்கு உரியதாய்த் தொடர்ந்து போற்றப் பட்டு வருகின்றது.

நண்ணியாளும் தன்மைக்கான மருதநில மேம்பாடு கருத்தில் கொள்ளப்பட்ட சூழலில் உடைமைப் பெருக்கமும், அரசின் தோற்றமும் உடைமை, உரிமை வேண்டல்களும் போர்க்கான அடிப்படைக் காரணங்களாகின்றன. சமுதாயத் தோடு சமுதாயங்கள் மட்டுமல்ல. உறவுகளோடு, உறவுகளே முட்டி மோதுகின்றன. மருத நிலச் சமுதாயத் தலைவர்களான வேந்தர்க்குச் சீறார் மன்னர், குறுநில மன்னர் ஆகியவரோடு உறவு, முரண் எனும் இரு நிலையிலும் தொடர்புகள் ஏற்படு கின்றன. இத்தொடர்புதான் சீறூர் மன்னர் சமுதாயத்தில் மேற்சுட்டிய மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. முதுகுடி மன்னரின் மருதவளம் அச்சமுதாய அழிவுக்குக் காரணமா கின்றது. வேந்தரின் மருதநிலப் பெருக்கச் செயற்பாடுகளே பிற சமுதாய அனைத்து மாற்றங்களுக்கும் காரணமாகின்றன. இவையன்றி ஒரே சமுதாயத்தினுள் அரசுரிமைப் போராட்டமும்

நடைபெறுகின்றது வேந்தர் சமுதாயத்தில் இவ்வுரிமைப் போராட்டத்தால் வடக்கிருந்து உயிர் துறந்த மன்னர்க்கு நினைவுச் சின்னமாய்க் கல் நடப்படுகிறது.

ஒரு புறத்தே நடுகல் வழிபாட்டு முறை தொடர்ந்து கைக் கொள்ளப்பட்டு வந்த சூழலில் மறுபுறத்தே மருதவள மேம்பாட்டால், வைதிக நெறியால் நடுகல் வெறும் நினைவுச் சின்னமாகிப் போகின்றது. இச்சமுதாயத்தில் 'நெல் வளப் பெருக்கத்திற்கான குறியீடாய்க் கருதப்பட்ட நிலையில் நெல்லுகுத்துப் பரவும் கடவுள் வழிபாட்டு நெறிகள் கைக் கொள்ளப்படுகின்றன. இதனைத்தான்

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே

(புற 335 : 9-12)

எனும் பாடலடிகள் உரைக்கின்றன.

சங்கப் பாடல்கள் பழஞ்சமூகச் சிதைவுகளையும் புதிய சமூகத் தோற்றுவாய்களையும் சுட்டும் மாறுதல் கால கட்டத்தினவாய் உள்ளன. இச் சமூகச் செயற்பாடுகள் அனைத்தையும் சமூக மாற்றத்தோடு இணைத்தாய்வது பழந்தமிழர் வாழ்வுண்மைகளை அறியத் துணையாக வல்லது.

ஆய்வுத்துணை நூல்கள் :

1. அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு 1981
2. ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு 1981.
3. தமிழர் சால்பு (சங்ககாலம்), க. வித்தியானந்தன், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, இரண்டாம் பதிப்பு 1971.
4. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், க. கைலாசபதி, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1966.
5. புறநானூறு, ஔவை சு துரைசாமிப்பிள்ளை (உரை), தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1978.

தஸ்தயேவஸ்கியின் கதாபாத்திரங்கள் (ஒரு உளவியல் பார்வை)

ஐ. சிவசுப்ரமணியஜெயசேகர், எம்.பி., பி.எஸ்.,

புகழ் பெற்ற அறிஞர் ஆல்பர்ட்ஐன்ஸ்டீன் ஒரு முறை தஸ்தயேவஸ்கியின் இரண்டு பக்கங்கள் கணிதவியலில் பல புத்தகங்கள் தரவியலாத தூண்டுதலை எனக்கு அளிக்கிறது என்று கூறினார். அது மட்டுமன்று. உலகம் முழுவதுமான பல உளவியல் அறிஞர்கள் வியக்கும்படி உளவியல் ரீதியான பல பாத்திரப் படைப்புகளை இலக்கியத்திலே படைத்தவர் பியோதர்தஸ்தயேவஸ்கி (Dostoyevsky) அவருடைய பாத்திரப் படைப்புகள் அவர் காலத்திய உலகில் கடினத் தன்மைகள் வித்தியாசமான குணாம்சங்கள் (Personality) பொருந்திய மனிதர்களை எங்ஙனம் பாதித்தது என்பதைச் சித்தரிக்கிறது. உண்மையிலேயே காக்காய் வலிப்பு (Epilepsy) எனப்படும் கொடூரமான நோயின் பாதிப்பிற்கு வாழ்நாள் முழுவதும் உள்ளானவர். ஒரு கடினமான குணாம்சம் (Complex Personality) உடலின் ஒழுங்கற்ற தன்மையால் (disorder) எவ்வாறு பாதிப்படைகிறது என்பதை தஸ்தயேவஸ்கியின் படைப்புகள் உளவியல் நூல்களுக்கு நிகராக ஆராய்வதால் இதனை 'Dostoyevsky Phenomenan' என்றே அழைக்கின்றனர். இலக்கிய உலகம் முழுவதிலும், எந்த ஒரு எழுத்தாளரும் இத்தகைய சாதனையைச் செய்ததில்லை. தனது எழுத்துக்களில் ஒவ்வொரு வகை மனப்பிறழ்வையும் (Psycopathy) கதாபாத்திரங்களாக வடித்துள்ளார். உண்மையில் இந்தப்படைப்புகள் கதைப்போக்கில் கலை நுணுக்கத்திற்காக அவரால் படைக்கப்பட்டவையே தவிர உளவியலுக்கு உதவிடும் நோக்குடனல்ல.

பொதுவாக எல்லா எழுத்தாளர்களைப் போலவே ஹிஸ்டீரியா எனும் மனப்பிறழ்வு நிலையால் தஸ்தயேவஸ்கியும் கரவப்பட்டிருக்கிறார். இக்குணம் கொண்ட கதாபாத்திரங்கள் தங்களின் மன உணர்ச்சிகளை அப்படியே வெளியில் கொட்ட முடியாமல் தவிக்கிறார்கள் (emotional poverty). எனவே உள்ளத்தில் ஒன்றாகவும், வெளியில் ஒன்றாகவும் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்றனர். இத்தகைய குணம் உள்ள கதாபாத்திரங்கள் கதையோட்டத்திற்கு மிகவும் உறுதுணையாயிருக்கிறார்கள் அவரது படைப்புகளில் எக்கத்தினா இவானோவா, கிருஷாங்கா, விசாகோகேனவோவ், போன்ற

'கரமசோவ் சகோதரர்கள்' நாவலில் வரும் கதாபாத்திரங்களும், மற்றும் நடாசியா பிலிப்பனோவா என்ற 'முட்டாள்' நாவலில் வரும் கதாபாத்திரமும் உளவியல் நூல்கள் சித்தரிக்கும் பலவகை ஹிஸ்டிரியா மனப்பிறழ்வு குணங்களைக் கொண்டுள்ளன (both typical & untypical). மேற்கூறிய கதாபாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடுகள் (emotional outbursts) மனநோய் மருத்துவர்கள் கூறும் குணநலன்களுடன் முழுமையாக ஒத்துவருகிறது. இதன் காரணத்தை ஆராய்பவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் வாழ்நிலையே மக்களிடையே அத்தகைய மனோநிலைகளை ஏற்படுத்தியது என்கின்றனர். நவநாகரீகம் வளர்தல், பெண்கல்வி, மூடநம்பிக்கை அழிந்து போதல் போன்றவைவே இருபதாம் நூற்றாண்டில் ஹிஸ்டிரிகல் மனப்பிறழ்வு குறையக் காரணமாகின்றன. தஸ்தயேவஸ்கியின் கரமசோவ் சகோதரர்கள் நாவலில் வரும் பியோத்தர் கரமசோவ் எனும் கதாபாத்திரம் எளிதில் தூண்டுதலுக்குள்ளாகும் (excitable) மனோநிலை உள்ளதாகப் படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நேர்மாறான மனோ நிலையுடன் பலவீனமான இதயம் எனும் கதையில் வரும் அரிக்ஷா எனும் கதாபாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. இவ்வகைக் கதாபாத்திரங்கள் எதிர்ப்புணர்வு இன்றியும், விரைவில் தளர்ச்சி அடைபவராகவும் காணப்படுகின்றனர். இம்மந்தநிலைக் குணாம்சத்தை உளவியலில் சோர்ந்த மனப் பிறழ்வு என அழைக்கின்றனர் (Asthenic psychopathy). இம் மனநிலை பற்றிய அவரது படைப்பே உளவியலுக்கு அவர் இலக்கியம் செய்த சேவையில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது இத்தகைய சோர்வு மனோநிலையின் கதைப் படைப்பில் தஸ்தயேவஸ்கியின் வழிகாட்டியாக நிற்பவர் கோகல் (Gokal) அவருடைய படைப்பான தி கிரேட் கோட் (The Great Coat) நாவலில் வரும் அகாசி அகாசிவிச் இத்தகைய கதாபாத்திரமே. மனநோய் மருத்துவர்கள் சோர்வு மனநிலைக்கு முக்கியக் காரணமாக மன வளர்ச்சிக் குறைவையே குறிப்பிடுகின்றனர். தஸ்தயேவஸ்கி இந்தக் கதாபாத்திரங்களைப் படைக்கும்பொழுது அவைகளின்பால் காட்டும் பரிவும், அவர்களின் நிலைமைகளைப் பற்றிய விஸ்தரிப்பும், அவரை ஒரு மனவளநோய்க் குறியீட்டாளராக (Psychopathologis) காட்டுகிறது. தஸ்தயேவஸ்கியின் இந்தக் கதாபாத்திரங்கள் தங்கள் குழந்தைப் பருவத்தில் பெரும்பாலும் தவறான வளர்ப்பிற்கும், மோசமான சூழ்நிலைகளுக்கும் உள்ளாவதாகப் படைக்கப்

பட்டுள்ளார்கள். இந்தக் குழந்தைகளின் அபிலாஷைகள் பெற்றோர்களால் தடுக்கப்பட்டு, முயற்சிகளுக்கு முட்டுக் கட்டைகள் போடப்படும் நிலையில் அவர்கள் சமூக விரோதச் சக்திகளுடன் இணையநேர்கிறது என விவரிக்கின்றார். எனவே தவறான வளர்ப்பே அவர்களின் மன, குணாம்சங்களை நிர்ணயிக்கிறது என முடிவுக்கு வருகிறார். அவர்களுக்காக முழுமனதுடனும், மனிதாபிமானத்துடனும் குரல் எழுப்புகிறார்; ஒரு மனிதனின் விநோதமான நடவடிக்கைகளுக்கு ஏதேனும் ஒரு காரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்பவில்லை. அவை களை ஒரு தொகுப்பாகக் காண்கிறார் பிறந்த குடும்பம், சமூகச் சூழ்நிலை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் மொத்தமே மனநோயாளி என்பது அவரது முடிவு. ஆனால் அவரது காலத்தில் மனநோய் வல்லுநர்களால் அவை ஏற்றுக் கொள்ளப் படவில்லை எனினும் இக்கால நவீன மருத்துவம் இதனை முற்றாக ஏற்றுக் கொள்கிறது. மேலும் மனநோய்க்கான காரணங்களைப்பற்றி மட்டுமன்று மனநோய் மருத்துவத்தையும் படைப்புகளில் தந்துள்ளார். மனநோய் மருத்துவத்தில் முக்கியத்துவம் பெறுவது மருந்து அல்ல மனநலமாக்கும் மருத்துவமே (psychotherapy) கரமசோவ் சகோதரர்கள் நாவலில் வரும் ஸோஸிமியா (zosmia) கூறும் அறிவுரைகள் அத்தகையவையே. மேலும் இந்த மனநல மாற்றம் சமூக மாற்றத்துடன் இணையும்பொழுது மட்டுமே வெற்றிபெற முடியும் என்பது அவரது நம்பிக்கையாகும்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வஞ்சிக் காண்டம் - ஓர் ஆய்வு

எம். மருதமுத்து
தமிழ் முதுகலை இரண்டாமாண்டு,
புதுகல்லூரி,
சென்னை - 14.

வஞ்சிக் காண்டத்தில் வரும் வளமான பகுதி அனைவருள்ளத்தையும் ஈர்க்கும் எழிலுடைப்பகுதி ஒன்று உள்ளது

" மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது "[1]

இப்பகுதி சிலம்பின் கதையை-செந்தமிழ்க் காப்பியத்தையே — சுருக்கி இரண்டடியில் தரும் கருவாக (Touch stone of the Epic of the Anklet) அமைகின்றது. மாதவி கடற்கரையிலே ஏழிசை வல்ல யாழிசையோடு பாடிய பாட்டிற்கும், செங்குட்டுவன் வடவரை வணக்கியமைக்கும் என்ன தொடர்பு? தென்னகக் கலைமாதின் கானற்பாணி வடவரின் தலையை நெரிப்பானேன்? விளக்கம் மூன்று காண்டங்களிலும் பரவிக் கிடப்பதைக் கற்றோர் அறிவர். புகார்க்காண்டத்திற்கும் வஞ்சிக் காண்டத்திற்கும் முடிபோடும் இப்பகுதி வஞ்சிக் காண்டத்தில் அமைந்து அனைவர் உள்ளத்தினையும் ஈர்க்கிறது.

காப்பிய வாயிலாக நாம் பெறும் அறிவுரைகளும் வஞ்சிக் காண்டத்திலன்றோ அமைந்துள்ளன. இலக்கியத்தில் இன்பம் மட்டுமிருந்தென்ன பயன்? நீதியும் இன்றியமையாததன்றோ? அம்முறையில் தான் அடிகளும் காப்பியத்தைப் படித்து முடிக்கும் தறுவாயில் " தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் " என விளித்து,

" புரிவு மிடுக்கணும் பாங்கற நீங்குமின் !
தெய்வந் தெளிமின் ! தெளிந்தோர்ப் பேணுமின் !
... ...
... ...
செல்லுந் தே த்துக் குறுதுணை தேடுமின் ! "[2]

1. சிலப்பு நீர்ப்படைக்காதை : 49—51.
2. சிலப்பு வாழ்த்துக் காதை : 185—201.

என அறிவுரை கூறுகின்றார், இங்ஙனம் அறிவுரை கூறும் அடிகள் வஞ்சிக்காண்டத்தை எழுதாதிருந்திருப்பாரா ?

பிறந்த நாடும் செல்லாது, கணவனைப் பிரித்த பாண்டிய நாட்டிலும் தரியாது, தன்னாடு போந்த அறத் தெய்வத்திற்கு நிலைபேறு செய்யுமாற்றான் அழகுக் கோயில் கட்டிய காவலனைப் பற்றி ஏதும் கூறாது மதுரைக் காண்டத்தோடு காப்பியம் முடிந்திருக்குமேல் காப்பியம் காப்பியமாகுமோ ? எனவே வஞ்சிக் காண்டம் வீரமா பத்தினிக்கு - காப்பியத்திற்கு- இன்றியமையாததாகின்றது எனலாம்.

கண்ணகி கதையும் காப்பியமும் ஒன்றி இணையும் இடமும் வஞ்சிக்காண்டமே !

"அருந்திற லரசர் முறை செயி னல்லது
பெரும் பெயர்க் பெண்டிற்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோ ருரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாதலின்
ஆர்புனை சென்னி யரசற் களித்துச்,
செங்கோல் வளைய வுயிர் வாழாமை
தென்புலங் காவன் மன்னவற் களித்து
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்த ரென்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவற் களித்து [1]

இங்ஙனம் கண்ணகி கதைக்கும், காப்பியப் போக்கிற்கும் உள்ள உட்பிணைப்பைக் கண்ணகி மூவேந்தர்க்கும் முக்காண்டத்தாலும் உணர்த்தும் ஒளிநெறியினையும் வஞ்சிக் காண்டத்தில் வரும் இப்பகுதியாலன்றோ அறிகின்றோம்? இங்ஙனம் கதையும் காப்பியமும், ஒன்றிடும் பகுதியுடைய காண்டத்தை இளங்கோவடிகளன்றி வேறு யார் தாம் எழுதி யிருக்கக் கூடும் ?

வஞ்சிக் காண்டத்தின் நடை, போக்கு, சாயல் ஆகியவை முன்காண்டங்களைப் போன்றே முழுதும் அமைந்து உள்ளது. புகார், மதுரைக் காண்டங்களை ஒருவரும் வஞ்சிக்காண்டத்தை இன்னொருவருமாக இருவேறு ஆசிரியர் இயற்றி இருப்பாராயின் இரண்டனுக்கும் உள்ள நடையும் போக்கும் வேறுபடுதல்

1. சிலப்பு தக்கற்காதை 207—217.

வெள்ளிடமலையாகும். எனவே முக்காண்டத்தையும் இளங்கோ யாத்திருக்க வேண்டும் எனத் துணியலாம்.

பெருங்காப்பிய இலக்கணம் கூறிய தண்டி ஆசிரியர், "நாற் பொருள் பயக்கும் நடைநெறித்தாகி" எனக் கூறுகின்றார். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் கூறுவதே பெருங்காப்பிய மென்பர். அங்ஙனம் காண்போமாயின் அறம், பொருள், இன்பம் மூன்றனையும் முதலிரு காண்டங்களிலும் கண்ட நாம், வீடுபேற்றையும் வீடுபேற்று வழியையும் வஞ்சிக் காண்டத்தில் தான் உணருகின்றோம்.

வள்ளுவர் போன்றே சிலம்பாசிரியரும், அறம், பொரு ளின்பம் மூன்றையும் கூறி, வீடுபேற்றைச் சொல்லாமற் சொல்லி உய்த்துணருமாறு உணர்த்திச் சென்றுள்ளார். வஞ்சிக் காண்ட மின்றேல் வீடுபேறில்லை; வீடுபேறின்றேல் பைந்தமிழ்க் காப்பிய மும் ஒரு பெருங்காப்பியம் ஆகா. ஆகையால் இவ்வகையிலும் இக் காண்டம் இன்றியமையாததாகின்றது.

நிறைவுரை :

சிலப்பதிகாரம் கதைகூற மட்டும் எழுந்ததன்று. மும்மைத் தமிழகத்தை மூவேந்தர் சீர்மையைத் துலக்க எழுந்ததென்றும், பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதல் உண்மையாதல் இவ்வஞ்சிக் காண்டத்தில்தான் என்றும், காப்பியம் இன்பியல் முடிபாதலும், வீரச்சுவை விளங்குதலும், இங்கேதான் என்றும், மூவேந்தர் ஒன்றுபடும் காட்சியும், கண்ணகி மாதரால் தொழுதேத்தப் படுதலும், பாத்திரப் பகுப்பு நிறைவு பெறுதலும் இக்காண்டத் தால்தான் என்றும், தென்னவனைத் தீதிலனாகக் காட்டவும், கண்ணகியைத் தூயளாகவும், குடமலையாட்டியாகவும், கொங்கச் செல்வியாகவும், ஒரு மாமணியாகவும் நிறுவுமிடம் இறுதிக் காண்டமே என்றும், கானற்பாணிக்கும், கனக விசயருக்கும் தொடர்பு படுத்தும் நிலையும், கதையும், காப்பிய மும் இணைக்கப்படுமிடமும் இங்கேதான் என்றும், கண்ணகியைக் கற்கோயில் கொண்டு நிலைபெறச் செய்தமை யும், முன்னொரு காண்டங்களில் உவகையில் மிதந்தும், துன்பத்தில் மூழ்கியும், புயலிடைச் சிக்கியும் தவித்த நம்மை, தென்றலின்பம் தவழ, அமைதி நிலவ மனநிறைவும் மாண்பும் பெறுமிடம் வஞ்சிக் காண்டமேயாகும்.

(தொடர்ச்சி 16 ஆம் பக்கம் பார்க்க)

காரைக்கால் பிரெஞ்சு விடுதலைப் போராட்ட அமைப்புகள்

ஆ. விஜயராணி, எம். ஏ., எம்.பில்.,
புதுவைப் பல்கலைக்கழகம்,
காரைக்கால்-609 602.

இந்தியாவிற்கு வாணிகம் பொருட்டு வந்த மேனாட்டினர்களில் பிரெஞ்சியர் புதுவை உள்ளிட்ட பகுதிகளில் தங்கள் வணிகத் தளங்களை நிறுவினர் படிப்படியாக அங்கேயே தங்கள் ஆட்சியையும் ஏற்படுத்தினர். அவ்வாறு ஆட்சி நடத்திய பகுதிகளுள் காரைக்காலும் ஒன்றாகும். இப்பகுதிகளில் பிரெஞ்சியர் நிலையான ஆட்சி தொடங்கியதும் பல்வேறு சட்டதிட்ட மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். அதனால் பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்கள் தொடங்கக் காரணமாக இருந்தது. அதில் காரைக்கால் பகுதியில் ஏற்பட்ட விடுதலைப் போராட்ட அமைப்புகள் பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

1. தொடக்கக் காலப் போராட்ட அமைப்புகள் :

பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் நடந்த தொடக்கக்காலப் போராட்ட அமைப்புகளை மூன்று நிலைகளில் காணலாம். 1. சமூகச் சீர்திருத்தம், 2. உரிமைகள் கோருதல், 3. கட்சிகள் அல்லது அரசியல் அமைப்புப் போராட்டங்கள் என்பனவாகும்.

1.1 சமூகச் சீர்திருத்தப் போராட்ட அமைப்புகள் :

புதுவை உள்ளிட்ட பிரெஞ்சிந்தியப் பகுதிகள் பிரெஞ்சிய ஆதிக்கத்தில் இருந்தபோது சங்கம் அமைக்கும் அடிப்படை

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்புதவி நூல்கள்:

1. சிலப்பதிகாரத் திறனாய்வு, மது. ச. விமலானந்தம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
2. History of the Tamils, PP 509-601.
3. இளங்கோவடிகள், டாக்டர் மு. வரதராசனார்.
4. ஆராய்ச்சித் தொகுதி P. 240.
5. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர் மு. வரதராசனார்.

உரிமைகூட மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் பொதுக்கூட்டங்கள் நடத்தவும் நேரடியான அரசியல போராட்டங்களில் ஈடு படவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய காலக் கட்டத்தில்தான் தேசப்பற்று மிக்க இளைஞர்கள், மாணவர்கள் ஒன்று திரண்டு சில சமூகச் சீர்திருத்த அமைப்புகளை ஏற்படுத்தினர் அவ்வாறு அமைக்கப்பட்ட அமைப்புகள் தாம் திருப்பணிச் சேனை, அரிசன சேவா சங்கம், மதுவிலக்குப் பிரச்சாரச்சபை, விவேகானந்தர் வாசகசாலை போன்றவையாகும்.

1. 1. 1. திருப்பணிச் சேனை :

1919 — 1920 ம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய அகிம்சாப் போராட்டத்தின் தாக்கம் காரைக்காலில் உள்ள இளைஞர்களுக்கு தேச உணர்வை ஏற்படுத்தியது. இத்தகைய நேரத்தில்தான் காரைக்காலில் ' திருப்பணிச் சேனை ' என்ற அமைப்பினை ஏற்படுத்தினார்கள். இதன் தலைவராக திருநள்ளாறு சு. அரங்கசாமி நாயக்கரும் செயலாளர்களாக சவரிப்பிள்ளை, லெயோன் சேன்மூான், வையாந்த பழனூர் கோவிந்தசாமி செட்டியார், சிவவடிவேல் பிள்ளை, பொன்னையாபிள்ளை போன்றோரும் காரைக்காலைச் சேர்ந்த மற்றும் பலரும் இவ்வமைப்பில் செயல்பட்டு வந்தனர்.

இதன் நோக்கம் சேரிகளைச் சுத்தம்செய்தல், சமபந்தி போஜனம் அருந்துதல், மதுவிலக்கை வற்புறுத்திப் பிரச்சாரம் செய்தல், கள்ளுக்கடை முன் மறியல் செய்தல் போன்றனவாகும். இஃதன்றி, இவ்வமைப்பின் பணிகளை 1923 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "குடியரசு" என்ற பத்திரிகை 1924-ஆம் ஆண்டில் இருந்து மக்கள் மத்தியில் வெளியிட்டு வந்தது. இதுவே காரைக்காலில் அமைக்கப்பட்ட முதல் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

1. 1. 2. அரிசன சேவா சங்கம் :

1930-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் தாக்கம் புதுவை மாநில இளைஞர் உள்ளத்தில் நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டியது. இத்தகைய காலக் கட்டத்தில்தான் வ. சுப்பையா இளைஞர்களை, மாணவர்களை ஒன்று திரட்டிச்சங்கம் அமைத்துச் சமுதாய மேன்மைக்காகப் பாடுபட்டார். அப்போது காந்தியடிகள் அமைத்த "அரிசன சேவா சங்கம்" என்ற அமைப்பின்

கிளை அமைப்பைப் புதுவையில் சவுரிநாதனைத் தலைவராகவும் வ. சுப்பையாவைச் செயலாளராகவும் கொண்டு 1933 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இதே அமைப்பு காரைக்காலில் 1933-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரங்கசாமி நாயக்கர் தலைமையிலேயே அமைக்கப் பட்டது. திருப்பணிச்சேனை என்ற அமைப்பில் செயல்பட்டு வந்த அனைவரும் இவ்வமைப்பில் பணியாற்றி வந்தார்கள்.

இதன் நோக்கம், அரிசன மக்கள் வாழும் கிராமங்களுக்கு இச்சங்க உறுப்பினர்கள் சென்று காந்தி வகுத்த திட்டத்தின் படி சேரிகளில் துப்புரவு மற்றும் சுகாதார வேலைகளையும் அரிசன குழந்தைகளுக்கு இரவுப்பள்ளிகள் அமைத்துக் கல்வி பயிற்றுவித்தலையும் செய்து வருவதாகும்.

மேலும், நாகப்பட்டினம் வந்த காந்தியடிகள் காரைக்கால் வந்து சென்றதும் அரிசன சேவா சங்க அமைப்பினாலே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அரிசன சேவாசங்கம் என்ற அமைப்பு காரைக்காலில் இயங்கி வந்தது. திருப்பணிச் சேனை என்ற அமைப்பு இதன் முன் அமைப்பாகவும் அதே நோக்கத்தோடும் செயல்பட்டு வந்த ஒன்றாகும்.

1. 2. உரிமைகோரி எழுந்தப் போராட்ட அமைப்புகள் :

1935-ஆம் ஆண்டு வரை சில சமூகப் பிரச்சனைகளை முன் வைத்துப் போராட்டங்கள் நடத்தியதின் விளைவாக, 1935-ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து மக்களின் சில அடிப்படை உரிமைகள் என்பதை முன் வைத்துப் போராட்டம் செய்தனர். இதில் தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் இவர்களின் உரிமைப்போராட்டங்கள் குறிப்பிடத்தக்கன.

1.2.1. தொழிலாளர்கள் உரிமை :

புதுவையில் தற்போது இருக்கும் மூன்று பஞ்சாலையில் வேலை பார்த்து வந்த தொழிலாளர்களே அப்போது பிரெஞ்சியரைஎதிர்த்துப்பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தினார்கள். அவர்களின் இடைவிடாத போராட்டத்தினால் 1937-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆந் தேதி வ சுப்பையா அவர்களின் முயற்சியால் “தொழிற்சங்கச்சட்டம்” புதுவைக்கு வழங்கப்பட்டது. அதன்படி தொழிலாளர்களுக்கு

8 மணிநேர வேலையும் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையும் வழங்கப்பட்டன. ஆசிய நாடுகளிலேயே 8 மணி நேர வேலை என்பது புதுச்சேரியில்தான் முதன்முதலில் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புதுவையில் நடந்த தொழிலாளர் எழுச்சியின் தாக்கம் காரைக்காலில் வாழ்ந்திட்ட உழைப்பாளி மக்களின் உணர்வைத் தூண்டிவிட்டது. காரைக்காலில் இருந்த இளைஞர்கள், தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்தனர். தையல் தொழிலாளர்கள் சங்கம், கடை குமாஸ்தாக்கள் சங்கம், சுருட்டுத் தொழிலாளர்கள் சங்கம், சிறுகடைக்காரர்கள் சங்கம் போன்றவை அமைத்துச் செய்யல்பட்டு வந்தார்கள். இச்சங்க அமைப்புப் பணிகளை எல்லாம் வ. பொன்னையா தலைமைதாங்கி நடத்தி வந்தார்.

இச்சங்க அமைப்புகள் அனைத்தும் புதுவைத் தொழிலாளர்கள் கோரிக்கைக்களுக்கு ஆதரவு தரும் வகையிலும் தங்களுக்கு அத்தகையதோர் உரிமை அளிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்திலும் செயல்பட்டு வந்தன.

1. 2. 2. மாணவர்கள் உரிமை :

தொழிலாளர்கள் எப்படித் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமைப் போராட்டம் நடத்தினார்களோ அதே போன்று மாணவர்களும் பிரெஞ்சியர் ஆட்சியில் கல்வி முறைகளில் இருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் போராட்டம் நடத்தினர்.

1. 1. 3. மதுவிலக்குப் பிரச்சாரச் சபை :

காரைக்காலில் "மதுவிலக்குப் பிரச்சாரச் சபை" என்ற அமைப்பை அரங்கசாமி நாயக்கர், சவரிப்பிள்ளை ஆகியோரின் ஒத்துழைப்புடன் கோவிந்தசாமி செட்டியார் 1929-ம் ஆண்டு ஆரம்பித்தார். இக்கமிட்டி தொடங்குவதற்கு முக்கியக் காரணம் பிரிட்டிஷ் இந்தியாவில் காந்தியடிகள் தலைமையில் நடந்த கள்ளுக்கடை மறியல், மதுவிலக்குப் பிரச்சாரம் போன்றவற்றின் தாக்கமேயாகும்.

இதன் நோக்கம் கள்ளுக்கடை முன் மறியல் செய்தல், அறிஞர்களைக் கொண்டு மதுவின் தீமைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுதல் தென்னை, பனை, மரங்கள் உடையவர்களிடம் கள்ளிறக்க மரம் கொடுக்கக் கூடாது என்று வேண்டுதல்

போன்ற காரியங்களைச் செய்து வருவதாகும். இதன் செயலாளராக பெ. திருநாவுக்கரசும், மற்றும் சிதம்பரம்பிள்ளை, காத்தப்பெருமாள் பிள்ளை தங்கவேல்பிள்ளை, அப்பு ஐயர் போன்றவர்களும் செயல்பட்டு வந்தனர்.

1.1.4 விவேகானந்தர் வாசகசாலை :

1933ஆம் ஆண்டு காரைக்காலில் உள்ள நிரவியில் "விவேகானந்தர் வாசகசாலை" தோற்றுவிக்கப்பட்டது. இது அமைப்பதற்கு முச்கியக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து "யுகந்தர்" என்ற பத்திரிகையை நடத்திய பூவேந்திரநாத்தத்தர் நீண்டகால ஆயுள் தண்டனையைப் பெற்றதும், அவருடைய சகோதரர் நரேந்திரர் (விவேகானந்தர்) விடுதலை வீரர்களின் பட்டியலில் இடம் பெற்றதுமாகும். விவேகானந்தரின் தேசப்பற்றுமிக்க கருத்துக்களும், அறிவுரைகளுமே அவர் பெயரில் வாசகசாலை அமைப்பதற்குக் காரணமாக இருந்தன.

தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடுவதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தல், அனாதைப் பிணங்களை எடுத்துக் கொண்டுபோய் அடக்கம் செய்தல், சுகாதாரப்பணி போன்ற செயல்களில் ஈடுபட்டு மக்களை நல்வழிப்படுத்துதல் போன்ற காரியங்களை இவ்வாசக சாலையைச் சேர்ந்த பணியாளர்கள் செய்து வந்தனர்.

மேற்கூறிய நான்கு அமைப்புகளும் சமூகச் சீர்திருத்தம் என்ற முறையில் பிரெஞ்சு ஆட்சியை மறைமுகமாக எதிர்த்த போராட்ட அமைப்புகள் என்பதை அறியலாம்.

கல்விக் கட்டண அதிகரிப்பைக் கைவிடுதல், காரைக்கால் மாஹே, ஏனம் பகுதி மாணவர்களுக்கு இலவசத்தங்கும் இட வசதி உதவித்தொகை வழங்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இயக்கம் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போராட்டம் நடத்திற்று. இதனால் பல மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றுள்ளனர்.

காரைக்காலில் உள்ள மாணவர்களும் புதுவை மாணவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தரும் வகையில் தங்களுக்கும் அத்தகைய உரிமை வழங்கப்படவேண்டும் என்று பேராட்டம் நடத்தினர். எம் மணி என்பவரை மாணவர் அணியின்

தலைவராகக் கொண்டு காரைக்காலில் உள்ள அனைத்து மாணவர்களும் ஒன்றுபட்டு மாணவர்கள் அமைப்பாகச் செயல்பட்டு வந்தனர்.

1. 2. 3. விவசாயிகள் உரிமை :

1937-ஆம் ஆண்டு தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை கிடைத்ததும், அதன் மூலம் விவசாயிகளுக்கும் சங்கம் அமைக்கும் உரிமை கிடைத்தது. 1937-ஆம் ஆண்டு ஜூலை மாதம் விவசாயிகள் முதல் போராட்டம் நடத்தினர். அதன்மூலம் பிரெஞ்சிந்திய விவசாயிகள் தங்கள் பிரச்சனைகளை அரசாங்கத்துக்கு அனுப்பி அதில் தீர்வுகாணப் போராடினார்கள்.

அதில் பாசனவசதி, மின்சார வசதி, உரவிநியோகம், தேவையான பொருள் பங்கீடு, விவசாயத் தொழிலாளர்களின் கூலிப் பிரச்சனை, நியாய வாரக் குத்தகை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இஃதன்றி இவர்கள் கிராம மக்களுக்குக் கைராட்டினங்களைக் கொடுத்து நூல்நூற்றல், நெசவு நெய்தல் போன்றன அமைத்துக் கொடுத்தும் தொழிற்சங்கங்களை நிறுவியும் தேசியப் பிரச்சார வேலைகளைச் செய்து வந்தார்கள்.

காரைக்காலில் ஆர். தங்கவேல் பிள்ளை என்பவர் தலைமையில் விவசாயச்சங்கம் அமைக்கப்பட்டது. இவர்கள் புதுவையில் நடக்கும் விவசாய சங்க மாநாட்டில் கலந்துக்கொண்டு தங்களின் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டு போராட்டம் நடத்தினர்.

இவ்வாறு, மேற்கூறிய மூன்று உரிமைப் போராட்டமும் காரைக்காலைவிட புதுவையில் தான் தீவிரமாக போராடப்பட்டது என்பதும், காரைக்காலில் உள்ளவர்கள் புதுவையில் நடந்த போராட்டத்திற்கு ஆதரவு தரும் வகையில் போராடியுள்ளனர் என்பதும் இங்கு ஆராயப்படுகிறது.

1.3. கட்சிகள் அமைப்பில் எழுந்த அரசியல் போராட்ட அமைப்புகள் :

தொடக்கப் போராட்டத்தின் மூன்றாவதாக நிகழ்வது அரசியல் நோக்கில் கட்சிகள் அமைத்துப் போராடியது. அவை மகாஜனக்கட்சி, காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சோசலிஸ்ட் கட்சி என்பனவாகும்.

1. 3. 1. மகாஜனக் கட்சி :

1935 - 1936 ஆம் ஆண்டு புதுவையில் நடந்துவந்த தொழிலாளர் போராட்டமானது 1937-1938 ஆம் ஆண்டில் உண்மையான ஜனநாயக அரசாங்க அமைப்பைப் பெறுவதற்கான போராட்டமாக மாறத் தொடங்கியது. அப்பொழுது பிரெஞ்சு ஆட்சியாளர்களுக்கு ஆதரவு தரும் வகையில் அதே சமயத்தில் மக்களின் நலனுக்காகப் போராடுவது என்ற போர்வையில் "Franco Indian Party" என்ற ஒரு கட்சி புதுவையில் செயல்பட்டு வந்தது. இத்தகைய காலக்கட்டத்தில்தான் பிரெஞ்சியர்க்கு எதிராகத் தோன்றிய இயக்கம் "மகாஜனக் கட்சி" என்பதாகும். அதன் கிளை அமைப்பாக 1938-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் காரைக்காலில் இவ்வமைப்புத் தொடங்கப்பட்டது.

அரங்கசாமி நாயக்கர், லெயோன், சேன்மூான், ஸையாந்த பழனூர், சவரிப்பிள்ளை போன்றவர்கள் இத்தகைப் பிரெஞ்சு எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணியில் இருந்து செயல்பட்டு வந்தார்கள். இஃதன்றி, அப்போது பிரெஞ்சுப்பகுதிகளில் விதித்திருந்ததலைவரி (Poll Tax)யை எதிர்த்து, அவ்வரியை நீக்கக் கோரித் தீவிரமாகப் போராடியவர்கள் மகாஜனசபையைச் சார்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. எம். அகமது நைனாமரைக்காயர், ஏ. எம் மதார்சாகிப் மரையக்காயரும் மற்றும் பலரும் இத்தகைய தலைவரிப் போராட்டத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றனர். இவ்வமைப்பே பிரெஞ்சியரை நேரிடையாக எதிர்த்த முதல் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

1.3.2. கம்யூனிஸ்ட் கட்சி :

1935-1938-ஆம் ஆண்டுகளில் "கம்யூனிஸ்ட்" என்ற தனிக்கட்சி கிடையாது. ஆனால் அப்போது காங்கிரஸ் என்ற அமைப்புகளுள் அனைத்து இலக்கங்களும் கட்சிகளும் பிரெஞ்சியரை எதிர்த்துச் செயல்பட்டு வந்ததை அறியலாம். 1943-ஆம் ஆண்டு 'கொம்பா' (Combot)அதாவது 'போரிடுதல்' என்ற பெயருடன் ஒரு அமைப்பை நிறுவி பிரான்சுக்குள்ளும் பிரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்தில் அப்போது வேறு நாடுகளில் இருந்த பிரதேசங்களிலும் அதன் கிளைகள் அமைக்கப்பட்டன. புதுவையில் 1944-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வ. சுப்பையா தலைமையில் அது இயங்கி வந்தது.

இத்தகையதோர் கொம்பா என்ற அமைப்பைக் காரைக்காலில் நீதிபதி ல்க்கோ என்பவர் துவக்கினர். அதன் தலைவராக சவரிப் பிள்ளையும் உறுப்பினர்களாக லேயோன், சேன்மூான், அரங்காமி நாயக்கர், கணபதி ஐயர், அம்பிகா சுந்தரமூர்த்தி, பொன்னையா போன்றவர்கள் செயல்பட்டு வந்தார்கள்.

ஆனால் இவ்வமைப்பு பின்னால் இரண்டாகப் பிரிந்து ஒன்று சுப்பையா தலைமையிலும், மற்றொன்று குபேர் தலைமையிலும் இயங்கி வந்தது. சுப்பையா தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி என்ற அமைப்பு இயங்கி வந்தது 946-ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை அமைப்பாக "தேசிய ஜனநாயக முன்னனி" என்ற ஒரு கூட்டு அமைப்பினை ஏற்படுத்தினர்.

இதன் நோக்கம் பிரெஞ்சிந்தியாவிற்குச் சுயாட்சி அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்' என்பதாகும். இவ்வாறாகக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற அமைப்பு பிரெஞ்சியரை எதிர்த்து வந்ததை அறியலாம்.

1. 3. 3. சோசலிஸ்ட் கட்சி :

1945-ஆம் ஆண்டு 'கொம்பா' என்ற அமைப்பு இரண்டாகப் பிரிந்து குபேர் தலைமையில் 'சோசலிஸ்ட் கட்சி' என்ற பெயருடன் இயங்கி வந்தது இதன் நோக்கம், தேசிய ஜனநாயக முன்னணிக் கட்சியின் திட்டமான பிரெஞ்சிந்தியா பரிபூரண சுதந்திரம் பெற்று இந்தியத் தாயகத்துடன் இணைய வேண்டும் என்ற கோஷத்திற்கு எதிராக, பிரெஞ்சுக் காலனி அமைப்புக்குள் இருந்தபடியே சுயாட்சி அதிகாரம் வேண்டும்" என்ற பிரெஞ்சுக்கு எதிரான அரசியல் திட்டத்தை முன் வைத்தது.

காரைக்காலில் குபேரின் முகவராக RMAS பக்கிரிசாமி பிள்ளை என்பவர் நியுமிக்கப்பட்டுக் காரைக்கால் மேயராகவும், பிரெஞ்சிந்திய சோசலிசக் கட்சியின் உறுப்பினராகவும் இருந்து வந்தார். P. R. சிவசுப்ரமணியன், சீனிவாசன், வேலாயுதம் செட்டியார் போன்றவர்களும் இந்த அமைப்பில் செயல்பட்டு வந்தார்கள். இக்கட்சி பிரெஞ்சியர்க்கு ஆதரவாக இருந்து கொண்டு பிரெஞ்சியரை எதிர்த்தவர்களைந் தங்களின் கையாட்களாக அடக்கி வந்தனர் என்று அறியப்படுகிறது.

இருப்பினும், விடுதலையின் இறுதிக் கட்டத்தில் இக் கட்சியினர் அரசு வாரண்டில் இருந்து தப்பிப்பதற்காகத் தாங்களும் விடுதலைக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு விடுதலைபெற முன்வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு, பிரிட்டிஷ் இந்திய விடுதலைக்கு முன்பு மேற்கூறிய மூன்று நிலைகளில் போராட்ட அமைப்புகள் இயங்கி வந்துள்ளது அறியப்படுகிறது.

2. பிரிட்டிஷ் இந்திய விடுதலைக்குப்பின் எழுந்த போராட்ட அமைப்புகள் :

1946-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவிற்கு விடுதலை என்று அரசு அறிவித்ததும், பிரெஞ்சிந்தியாவிற்கு அத்தகையதோர் விடுதலை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பிரெஞ்சுத் தேச மக்களும் விடுதலைக்காகப் போராடத் தொடங்கினர். அதில் முதல் அமைப்பாக தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை நிறுவி அதன் பல்வேறு கிளை அமைப்பினை நிறுவினர்.

2, 1. காரைக்கால் தேசீய காங்கிரஸ் :

1946-ஆம் ஆண்டு காரைக்காலில் "இந்திய தேசீய காங்கிரஸ்" என்ற முதல் அமைப்பை நிறுவினர். இதன் கிளை அமைப்பாக அதே ஆண்டில் "காரைக்கால் தேசீய காங்கிரஸ்" என்ற அமைப்பை ஏற்படுத்தினர். இதன் நோக்கம் பிரெஞ்சுநிலப் பகுதிகள் அனைத்தும் சுதந்திரம் அடைந்து இந்திய யூனியனோடு இணைய வேண்டும் என்ற தலையாயக கோரிக்கையை முன்வைத்தது பிரெஞ்சியரை எதிர்ப்பதாகும். இந்த அமைப்பின் தலைவராகப் பிச்சைக் கண்ணுப்பிள்ளையும், செயலாளராக நாகராஜ முதலியாரும் உறுப்பினர்களாகக் காரைக்காலைச் சேர்ந்த பலரும் செயல்பட்டு வந்தார்கள்.

2 2. காரைக்கால் மாணவர் காங்கிரஸ் :

இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்புக்குள் செயல்பட்டு வந்த பிரிவுதான் "மாணவர் காங்கிரஸ்" என்ற அமைப்பு. காரைக்காலில் 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் 21-ஆம் தேதி மாணவர் காங்கிரஸ் என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இதன் தலைவராக ம. சிவானந்தமும் மற்றும் பலரும் மாணவர் அமைப்பாகத் திரண்டு பிரெஞ்சியரை எதிர்த்து வந்தனர்.

இதன் நோக்கம், பிரெஞ்சியர் உடனடியாக பிரெஞ்சிந்தியப் பகுதிகளை விட்டு வெளியேற வேண்டும் என்ற கோஷத்தை முன் வைத்தல் ஆகும். இவர்களின் போராட்டம் விடுதலை பெறும் வரை 'நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

2. 3. காரைக்கால் தேசிய இளைஞர் காங்கிரஸ் :

மாணவர் காங்கிரஸ் பிரெஞ்சு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் 1951 ஆம் ஆண்டு காரைக்காலில் "தேசிய இளைஞர் காங்கிரஸ்" ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைவராக ஆர். இராமசீனிவாசனும் செயலாளராக பு. சிவநாநந்தமும் மற்றும் உறுப்பினர்களும் செயல்பட்டு வந்தனர்.

இதன் நோக்கம், விடுதலைக்குப் பாடுபடுவதும் மக்களிடையே தேசிய உணர்வுகளைத் தோற்றுவிப்பதும் ஆகும். பின்னால் இவ்வமைப்பைச் சார்ந்தவர்கள்தாம் கொடிசத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு விடுதலை பெறும்வரை போராடினர்.

2. 4. இணைப்புக் காங்கிரஸ் :

1948 ஆம் ஆண்டு விடுதலை இயக்கம் தீவிரமடைந்து பிரெஞ்சியரின் அடக்குமுறையும் தீவிரமடைந்து அதில் 1949 ஆம் ஆண்டு காரைக்காலில் செயல்பட்டு வந்த அனைத்துக் கட்சிகளும் தனித்தனியே விடுதலை பெறுதல் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வந்தன.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் விடுதலை வீரர்கள் தனித்தனி யாகக் கட்சிகள் அமைத்துப் போராடியதைக் கண்ட டில்லி அரசு அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் N. V. இராஜ்குமார் என்பவரை இப்பகுதிகளுக்கு அனுப்பிவைத்தது. அவரது முயற்சியால் காரைக்காலில் செயல்பட்டு வந்த இணைப்புக்கழகம், தேசிய காங்கிரஸ் இளைஞர் காங்கிரஸ், திராவிடக்கழகம், முஸ்லீம் லீக் கட்சிகளும் ஒன்றுகூடி "இணைப்புக் காங்கிரஸ்" (Merger congress) என்ற அமைப்புக்குள் செயல்பட வேண்டும் என்ற முடிவு முன் வைகக்ப்பட்டது.

இதன் தலைவராக சவரிப்பிள்ளையும், துணைத்தலைவர் களாக ஸ்ரீகந்தராமானுஜமும், லியோன் சேன்ழானும், செயலாள ராக கணபதி ஐயர், நாகராஜமுதலியாரும், பொருளாளராக

அருணாசலப்பிள்ளையும், உறுப்பினர்களாக பிச்சைக்கண்ணுப் பிள்ளை, இரத்தினவேலு, ராமசாமி ஐயர் போன்றோர்களும் இந்த அமைப்பில் இருந்து விடுதலைபெறும்வரை' போராடியது குறிப்பிடத்தக்கது.

மேலும் பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இணைப்புக்குப்பின் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டுச் செயலாற்றி வந்தனர். இவ்வாறு இணைப்புக் காங்கிரஸ் என்ற அமைப்பு ஒன்றுபட்ட அமைப்பாக இருந்து பிரெஞ்சியரை எதிர்த்துவந்தது என்பது தெளிவாகிறது.

2. 5. இணைப்புக் கோரி எழுந்த போராட்ட அமைப்புகள் :

1950 — 1951 ம் ஆண்டுகளில் போராட்டம் தீவிரம் அடைந்து 1952 ம் ஆண்டில் விடுதலைப் போராட்டம் கொடி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இறங்கியது. 1953 ஆம் ஆண்டு கேவல்சிங் இந்தியக் கவுன்சில் ஜெனரலாக பதவியேற்ற பின்னர் இணைப்புப் போராட்டம் உச்சநிலையை அடைந்தது.

I) சத்தியாக்கிரகப் போராட்டம் :

1954-ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டம் தீவிரம் அடைந்து மார்ச் மாதம் RMAS வெங்கடாஜலபதிப்பிள்ளை அவர்களைத் தலைவராகவும் லெயோன் சேன்மூனைப் பொதுச் செயலாளராகவும் கொண்டு "ஐக்கிய இணைப்பு முன்னணி" என்ற அமைப்பைக் காரைக்காலில் அமைத்தனர். இதில் மாணவர் பிரதிநிதியாக எம். ராமசாமியும் மற்றும் பள்ளிமாணவர்களும் சேர்ந்துகொண்டு செயல்பட்டுவந்தனர்.

இக்கட்சியின் சார்பாக வெங்கடாஜலபதிப்பிள்ளை, ஸ்ரீகந்தராமானுஜம், ராஜராஜமுதலியார், பிச்சைக்கண்ணுப் பிள்ளை, ஜர்புகேசப்பிள்ளை ஆகியோர்கள் தலைமையில் பிரெஞ்சியரை எதிர்த்து சத்தியாக்கிரகப் போராட்ட ஊர்வலம் நடத்தினார்கள். இதில் பலர் அடிபட்டும், சிறைத்தண்டனை யும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ii) உண்ணாவிரதப் போராட்டம் :

இஃதன்றி ஐக்கிய முன்னணியைச் சார்ந்தவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் என்ற கோஷத்தை முன்நிறுத்தி பிரெஞ்சியர் இந்தியப் பகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்று போராட்டத்தைத் தொடங்கினர். சிசேசவியே, இராமசாமி, திருநாவுக்கரசு, ரேவதசிப்ஹான போன்றவர்கள்

இப்போராட்டத்தினை மேற்கொண்டனர். இப்போராட்டத்தினை நிறுத்தும் முகமாக சிவானந்தம், செபஸ்தியன், தேவகிநந்தன், மீனாட்சி சுந்தரம் ஆகிய நால்வரும் தங்களின் அரசு வேலைகளை இராஜினமா செய்து உண்ணாவிரதப் போராட்டத்தினை நிறுத்தினர்.

iii) சாலைமறியல் போராட்டம் :

பிரெஞ்சிந்திய விடுதலையின் இறுதிப் போராட்டமாக சாலைமறியல் போராட்டத்தினைக் காரைக்காலில் அனைத்துத் தொண்டர்களும் நடத்தினர். இப்போராட்டமே பிரெஞ்சியர் வெளியேறத் தீவிரமாக செயல்பட்ட ஒரு அமைப்பு ஆகும். இதனால் பலர் கைது செய்யப்பட்டும் போலிஸின் அடிதடிக்கும் ஆளானர்கள். இப்போராட்டமே பிரெஞ்சிந்தியாவின் இறுதிப் போராட்டமும் விடுதலைக்கு வித்திட்ட அமைப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக, காரைக்காலில் மேற்கூறப்பட்ட விடுதலைப் போராட்ட அமைப்புகள் விடுதலைக்குப் பெரிதும் துணையாய் இருந்தன என்பது மேற்கூறிய கருத்துக்கள் வழி அறியலாம்.

குறிப்பு :

இக்கட்டுரை புதுவைப் பல்கலைக்கழகம், காரைக்கால் தமிழ்த் துறையில் செப்டம்பர் 29 ஆம் தேதி நடந்த "காரைக்கால் விடுதலைப் போராட்ட வீரர்கள் சொற்பொழிவு" என்ற ஒரு நாள் கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது.

துணை நின்ற நூல்கள் :

1. தில்லைவனம். சு., 'புதுவை மாநிலத் தமிழ் வளர்ச்சி', பாரி நிலையம், சென்னை 1980.

2. ... ... : 'புதுச்சேரி மாநில வரலாறு', நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி 1938.

3. Ramasamy, A., : '**History of Pondicherry**', Sterling Publishers, New Delhi 1987.

4. Rajkumar, N. V., : '**The Problem of French India**', All India Congress Committee, New Delhi 1951.

5. Saroja Sundarajan : **Glimpses of the History of Karaikal**, Lalitha Publication Madras 1985.

இதழ்கள் :

1. சீனிவாசன், சுப. : அன்புள்ள ஆசிரியர்க்கு புதுவை மாநில ஆசிரியர் சங்க அலுவல் முறைத் திங்களிதழ்-காரைக்கால்.

2. சுப்பையா, வ. : சுதந்திரம் (சிறப்புமலர்) சுதந்திரம் பத்திரிகை வெளியீடு, புதுவை 1985.

... ... சுதந்திரம் (பொன்விழா மலர்) சுதந்திரம் பத்திரிகை வெளியீடு புதுவை 1984.

3. ... ... சுதந்திரம் (இலட்சியப் பயணம்) சுதந்திரம் பத்திரிகை வெளியீடு, புதுவை 1987.

அரசு வெளியீடு :

1. Gazetteer of India : Union Territory of Pondicherry, II Volumes, Pondicherry.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிரபஞ்சன் சிறுகதைகள்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம். ஏ, பி.டி, எம். பில்., பிஎச்.டி.,
தேர்வு நிலைத் தமிழ் விரிவுரையாளர்,
அ. வீ. வா. நி. திருபுட்பம் கல்லூரி, பூண்டி-613 503.

முடிவுகள் :

செயல் முடிவு, நிகழ்ச்சி முடிவு, சூழ்நிலை முடிவு, உரையாடல் முடிவு, கடித முடிவு, வாக்குமூல முடிவு, துன்ப முடிவு, இன்ப முடிவு எனப் பிரபஞ்சனின் கதைகளின் முடிவுகள் காணக்கிடக்கின்றன. 'ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள்' 'ஒரு பகல் நேர நாடகம்', 'முறிவு', 'மாமன் உறவு', 'கருப்பட்டி', 'கதாநாயகி குளித்த கதை', 'சினேகம்', 'ராஜகோபுரமும் சங்கப் பலகையும்', 'எனக்கும் தெரியும்', 'சின்னஞ் சிறு வயதில்', 'அவனும் அவளும்', 'சிக்கன் பிரியாணியும் சீதேவி படமும்' ஆகிய கதைகள் கதைமாந்தர்களின் செயலுடனோ, நினைவுடனோ முடிகின்றன. 'பூக்களை மிதிக்கக் கூடாது', 'நிகழ் உலகம்', 'சைக்கிள்' ஆகிய கதைகள் நிகழ்ச்சி முடிவு உடையவை எனக் கருதலாம். 'வீடு', 'சங்கம்' ஆகியவை சூழ்நிலை முடிவு கொண்டவையாகும். 'பலி', 'பிம்பம்', 'சலிப்பு', 'பகை', 'விழுது', 'சூரியனைப் பார்க்காமல்', 'தலை சாய்க்க ...', 'காணாமல் போனவர்கள்' 'தொலைந்து போனவள்...' 'அப்பாவு கணக்கில் 35 ரூபாய்', 'ஆண்பிள்ளை', 'தட்சணை', 'தந்தையும் மகளும்' 'அரி என்கிற நண்பன்', 'அப்பாவின் வேஷ்டி' ஆகியன தற்கூற்று முடிவு கொண்டவையாகும். 'ராட்சஸக் குழந்தை', 'நேற்று மனிதர்கள்', ஓடிப் போனவள் திரும்பியபோது', 'வடு' 'தியாகி...' ஆகிய கதைகள் உரையாடல் முடிவு பெற்றவை. 'யாரும் படிக்காத கடிதம்', 'சுமதிக்கு ஒரு கடிதம்' ஆகிய இரண்டும் கடித முடிவு உடையன. 'கேசவன் கல்யாணத்தின் போது', 'பிரும்மம்' 'மீன்', '3 நாள்', 'மாறுதல்கள்', 'கருணையினால் தான்', 'சைக்கிள்', 'வரிசை' '4-வது வழி', 'நிழல்', 'மனசு', 'மனுஷி', 'விட்டுவிடுதலை ஆகி...' ஆகியன கதை சொல்லியின் வாக்குமூலத்துடன் முடிகின்றன. 'மாமன் வரவு' 'அடி', 'ருசி' 'மரி என்கிற ஆட்டுக்குட்டி'

'காலம் இனி வரும்' ஆகிய கதைகள் துன்ப முடிவு கொண்டவையாகும். ஏனைய கதைகளின் முடிவுகள் இன்ப முடிவு உடையவை எனலாம்.

கதையாசிரியர்கள் தமது படைப்புத்தொழில் பற்றிய ஞானமும் தனித்தன்மையும் குறிக்கோளும் கொண்டிருப்பர். திறனாய்வாளர் மட்டத்தினின்று கருத்துக்கள் மேற்போந்தவாறு வெளிப்படினும் படைப்பாளர் பிரபஞ்சன் தமது கதை முடிவுகளைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறியிருப்பது ஓர்தற்பாலது :

> ஒவ்வொரு கதையிலும் சொல்ல வருகிற விஷயம் என்ன என்று எனக்குத் தெளிவானதுமே கதையின் முதல் வாக்கியமும் கடைசி வாக்கியமும் எனக்குள் முடிவாகி விடுகிறது. இந்த முடிவு ஏற்படாதவரை நான் எழுதவே தொடங்குவதில்லை (என்னைப் பற்றி, பிரபஞ்சன் கதைகள்)

பொதுவாகக் கூறின் பிரபஞ்சனின் கதை முடிவுகள், தொடக்கத்திற்குத் தொடர்பும் தெளிவும் விளக்கமும் உடையதாய் விளங்குவது மட்டுமன்றிச் சரியான நிறுத்தத்தில் - சரியான நேரத்தில் வந்து நிற்கின்ற பேருந்துகளாய்ப் பொலிகின்றன. சான்றாக, 'நேற்று மனிதர்கள்' என்னும் கதையின் முடிவு,

"தம்பி, மாமா போயிட்டாரு" என்றார் தலையாரி— என்பதோடு கதைக்கு முற்றுப் புள்ளி வைப்பதைக் காட்டலாம். கதை முழுவதும் மாமாவைப் பற்றிய செய்திகள். ஆகவே, அந்த மனிதரின் இறுதி நிலை அவருடைய மரணத்துடன் காட்டப்படுகிறது. கதையின் வடிவம் இந்த முடிவோடு முழுமை பெற்றுவிடுகிறது. ஒரு நல்ல கதையின் இலக்கணத்தை இம்மாதிரியான முடிவுகள் இயற்றுகின்றன என்றால் தவறில்லை.

கருக்கள் :

மனித நேயம், சமூக உறவுகள், சமுதாய ஆய்வு, பாலியல் சிக்கல், உளவியல் சிந்தனை, பெண்கள் பிரச்சனை, அரசியல் பித்தலாட்டம், திரையுலகம், தன்னனுபவம் தனி நபர் வாதம் முதலானவை பிரபஞ்சனின் கதைகளினுடைய கருக்களாக — பாடுபொருள்களாக உள்ளன.

விஷயங்களில் புதுசு என்று எதுவும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. நம் பார்வையும், சொல் முறையும்தான் காலத்துக்குக் காலம் மாறிக்கொண் டிருக்கிறது. ஒரு விஷயத்தின் மீதான கலைஞன் பார்வையும், நோக்குமே, அதை இலக்கியமாகவோ அன்றி அ-இலக்கியமாகவோ மாற்றியமைக்கிறது. விஷயம் பிரதானம் என்கிற கருத்து முரண்பாடாகத் தோன்றலாம். அவ்வாறில்லை. அறிவும், ஞானமும் வளர வளர வாழ்க்கையின் மேல் கட்டுமானங்கள் தான் மாறி வருகின்றன. சென்ற நூற்றாண்டு வீடுகளுக்கும், நம் காலத்திய வீடுகளுக்கும் உள்ள வித்தியாசமே இந்த கருத்துக்கும் பொருந்தும் வீடு களின் முகங்கள், வீடுகளுக்குள் இருக்கும் வசதிகள் மாற்றம் பெற்றுள்ளன ஆனால் 'வசிப்பிடம்' என்கிற கருத்தாக்கம் ஒன்றுதான்.

என்று பிரபஞ்சன் தான் கைக்கொள்ளும்-கையாளும் பொருளை-கருவைக்குறித்துக் கருத்துரைத்தவாறு பலரும் கையாண்ட-கையாள்கிற கருத்துக்களேயாயினும் அவரே கூறியாங்குப் பார்வையும் பார்த்ததைச் சொல்லும் முறையுமே அவரை அடுத்தவரினின்று பிரித்துக் காட்டுகின்றன. எல்லாக் கலைஞர் களிக்குமுரிய நியதிதான் இஃது என்பதைக் கொண்டு பிரபஞ்சனின் கருக்களை அணுகலாம்.

'அம்மா' இளம் விதவையின் அடக்கப்பட்ட — ஒடுக்கப் பட்ட பால் உந்துதல் (Sex Drive) காரணமாய் அடுத்த வீட்டுக்காரர் தன் வீடு தேடி வந்து ஒலிபரப்பும் அண்டை அயல்புரங்களின் காமச் செய்திகளைத் தடுக்காமல் கேட்டுக் கிளர்ந்த கிளர்ச்சியினால் புகை வண்டிப் பயணத்தின்போது தன் பெட்டியில் இருந்த முன்பின் தெரியாத மானிடனிடம் பாலுறவு கொண்டு வதைத்த உணர்வுக்கு விடுதலை கொடுக்கிறாள். அவளது உறவைப் பார்த்த மகன் அம்மாவின் மீது ஆத்திரமோ, வெறுப்போ காட்டாது கண்மூடித் திரும்பிப் படுத்துக் கொள்கிறான். எந்தக் கிழவியும் விழித்துக்கொண்டு விடக்கூடாது என்று கடவுளை வேண்டிக்கொள்கிறான் அதுவன்றி அந்நிகழ்ச்சிக்குப் பின்னர்த் தன் அம்மாவைப்பற்றிச் சிந்திப்பதை நிறுத்திக்கொள்கிறான். முன்பெல்லாம் இளமையின் பூரிப்புடன் இருக்கிற அம்மா எப்படி உணர்வுகளைக் கட்டுப் படுத்திக் கொண்டு சுத்தமாய்-தூய்மையாய்-கற்புடையவளாய்க் காலந்தள்ள முடிகிறது என்று எண்ணி வியந்திருக்கிறான்,

அம்மாவைப் புரிந்து கொண்ட மகன் அவளுடைய செய்கையில் உள்ளடங்கியுள்ள நியாயத்தை - நியதியை ஏற்றுக் கொண்டு விடுகிறான். அதனாலேயே அவன் அம்மாவோடு எப்பொழுதும் போல இணைந்து வாழமுடிகிறது. மகனின் இந்தப் பார்வைக்கும் மனப் பக்குவத்திற்கும் காரணம் கதையாசிரியர்தான். அவருடைய பார்வை பகுத்தறிவின்பாற்பட்டது; உளவியல் ரீதியின்பாற்பட்டது. இத்தன்மையே - அணுகுமுறையே பிறரினின்று அந்நியப்பட்டு நிற்கிறது. பாலியல் பிரச்சினை அம்மாவில் புதிய பார்வை பெறுகிறது

தியாகத்தை மையமாய்க் கொண்ட கதை 'தியாகி' இதில் வருகிற சிவபாதசுந்தரம் உண்மையான காந்தியவாதி: விடுதலைப்போரில் பங்கு கொண்டு உடைமைகளை இழந்து சிறை சென்றவர். நாடு விடுதலை பெற்றதும் பெரியவர் எஞ்சிய பொருள்களை விற்றுக் குடும்பத்தை நடத்தினார். மகன் கல்லூரியிலும் மகள் பள்ளியிலும் படித்தனர். அவர்களது படிப்பிற்காக வேறு வழியின்றித் தியாகிகளுக்கு அளிக்கப் பெறும் அரசு உதவி நிதியை விண்ணப்பம் செய்து பெற்றுப் பயன்படுத்தினார். மகன் காந்தி படிப்பை முடித்து வேலைக்குச் சென்றான். பெரியவர் இனிமேல் அரசு உதவி தேவை இல்லை என்று கருதி, அலுவலக அதிகாரியைச் சந்தித்துத் தனக்கு அடுத்த மாதம் முதல் உதவிப் பணம் தேவை இல்லை என்று கூற அதிகாரி காரணம் கேட்க உண்மை நிலையை விளக்கித் தாள்களில் கையெழுத்திட்டு வீடு திரும்புகிறார். மகனும் மருமகளும் அவருடைய செய்கையை வெறுக்கின்றனர் தியாகத்தை அறிவுறுத்துகிற இக்கதையில் பிரபஞ்சனின் பார்வை புதுக்கோணத்தில் விழுந்ததாலேயே அந்தத் தியாகி பொருள் உள்ள போதும் இல்லாத போதும் தனக்குத் தேவையற்றதை (தேவை இருந்துங் கூட) நான் வைத்திருக்க விரும்பாமல் நாட்டு நலனுக்காகத் தந்துவிட முந்துகிறார். அடி முதல் முடி வரை தியாகத்தை வலியுறுத்த விரும்பிய படைப்பாளியின் இயக்கம் இப்படித்தான் இருக்கும் என்பதற்குப் பிரபஞ்சன் வரைந்து காட்டிய ஓவியமே இந்தக் கதை. தியாகி உதவி நிதிக்காகத் திரண்டு வருகிற கூட்டத்தின் நடுவே பெற்ற உதவி நிதியை நிறுத்தச் சொல்லி எதிர்ப்படுகிற ஓர் அசலான ஆத்மாவைக் கண்டு காட்டுகிற முறைமையினால் 'தியாகம்' தியாகத்தின் விளிம்பிற்கே சென்றுவிடுகிறது.

'கருணையினால்தான்' கதையில் கேசவன் தன் அன்பிற்குரிய சுமதியைக் கொலை செய்தவனைக்

(தண்டபாணி) கேசவன் கொலை செய்து விடுகிறான். பல நாள் தலைமறைவாகி இருந்தவனைக் காவல்துறையினர் அவன் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கையில் சூழ்ந்து நின்று பிடித்துக் கைதியாக்கிக் காவல்துறை 'வானில்' ஏற்றிக்காவல் நிலையத்திற்குக் கொண்டு வருகின்றனர். காவல்துறையினரின் தலைவனான தேவா (தேவகுமார்) கேசவனைத் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டு தனிமையில் அவனை விசாரிக்கிறான். கேசவன் தண்டபாணியைக் கொன்றதற்கு வருந்திச் சரணடைய இருந்ததையும். தோழர்களின் தூண்டுதலினால் தான் கொலை செய்ய நேர்ந்தது என்பதையும் கூறுகிறான். அவனுடைய கள்ள மில்லாத உள்ளத்தையும் இளமை கொழிக்கும் உடலையும் (27 வயது) கண்ட தேவா அவனுக்கு நேர இருக்கிற சித்திரவதைகளைச் சிந்திக்கிறான்; அவனுக்காக அவன் மனம் வருந்துகிறது; அழுகிறது. விடியற்காலை வேளையில் கேசவன் சுமதிக்குப் பிடித்தமான தங்கரளிப் பூவைப் பொறுக்க ஆசைப்பட்டுத் தேவாவின் அனுமதியோடு அம்மரத்தை நோக்கி நடந்து பூக்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் பொழுது தேவா துப்பாக்கியினால் அவனைச் சுட்டுவிடுகிறான். அந்த இடத்திலேயே கேசவன் இறந்து கிடக்கச் சத்தம் கேட்டு ஓடி வந்தவர்கள் என்னவென்று கேட்கின்றனர். கேசவன் தப்பி ஓட முயன்றதால்தான் சுட்டுவிட்டதாகத் தேவா காரணம் சொல்கிறான்.

கருணையைக் கருப்பொருளாகக் கொண்டுள்ள இக்கதையின் அணுகுமுறை விந்தையானது; வேறுபாடுடையது. கொலைக் குரிய சூழலையும் காரணத்தையும் சொல்லித் தனது குற்றத்தை ஒத்துக் கொள்கிற இளைஞனை நம்பிச் சட்டமோ, அரசாங்கமோ மன்னிப்பளித்துக் திருந்தி வாழ்வதற்கு ஒரு வாய்ப்பைத் தராது. மாறாகச் சட்டவிதிகளின்படி அவனைத் தண்டிக்கிறது. அது ஒருபுறம் இருக்க, உண்மையை உணர்ந்து ஒளிக்காமல் ஒத்துக்கொள்பவனைக் காவல்துறையினர் எல்லார்க் கும் உரிமையாக்குகிறப் பொது விதியினைத் திணிக்கும் முயற்சியில் சித்திரவதைச் செய்வதனின்றும் விலக்கு அளிப்பதில்லை. இந்தப் பொதுமையை அந்த முகாமிலிருக்கிற ஒரு மனிதர் உணர்ந்து கடமையையும் ஆற்றி, கருணையையும் காட்டித் தன்னைத் தன்னுடைய தோழர்களிடமிருந்து வேறுபடுத்திக் கொள்கிறார். காந்தியக் கண்ணோட்டமுள்ள தேவா, உயிர்படும் வதையைப் பொறுக்க முடியாமல் அந்த

(தொடர்ச்சி 84ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மொழியாய்வுப் பணியில் கணிப்பொறி

— க. அன்பழகன், எம். ஏ., (எம். ஃபில்)
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
அரண்மனை வளாகம்,
தஞ்சாவூர்.

1. 0: முன்னுரை :

முன்பொரு காலத்தில் மனிதன் கனவுகளோடு கண்டு நினைந்து மகிழ்ந்தவை எல்லாம் இன்று செயலாய் நனவாகிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய முன்னோர்கள் அவர்களின் வாழ்க்கைச் சூழல், அவர்கள் வாழ்ந்த காலக் கட்டம் இவற்றிற்கும் இன்று வாழ்ந்து வரும் நமக்கும், நம்முடைய வாழ்க்கைச் சூழலுக்கும் இடையே பெருத்த வேறுபாடு விழுந்து கிடக்கிறது. இவற்றிற்குக் காரணம் படிப்படியாய் வளர்ந்த அறிவியலின் வளர்ச்சி எனில் அது மிகையன்று. இன்று அறிவியலின் வசதிகள் ஒவ்வொரு தனி மனித வாழ்வின் எல்லா செயற் பாடுகளிலும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இதற்கு உலகெங்கணும் காணக் கிடைக்கின்ற அறிவியல் கண்டு பிடிப்புகளே சான்று பகரும்.

ஒரு மனிதன் தன்னுடைய எண்ணங்களையும், மன வெளிப்பாடுகளையும் இன்னொரு மனிதனிடம் பகிர்ந்து கொள்ள மொழி ஒரு கருவியாக விளங்குகிறது. ஒரு தனிப்பட்ட

(38 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிரையே கொன்றுவிடுகிறான். அவன் புரிந்ததும் கொலை தான் என்றாலும் அதற்குரிய அடிப்படை கருணை - நேசம் ஆகும். கருணை - அன்பு - நேசம் - இரக்கம் என்று சொல்லப் படுவதெல்லாம் ஓர் உயிரின் மீது உயிரைக் காக்கும் பொருட் டாக மட்டும் அமைவதில்லை. மாறாக, அதன் எதிர்ப் பக்கமான — மறுபுறமான உயிரின் வதைக்கு ஒரு முடிவு - தீர்வு காண்பதுவும் ஆகும். அதாவது அந்த உயிர்படும் துன்பத் தினை நீடிக்கச் செய்யாமல் அதனையே கொன்று விடுத லாகும். பிரபஞ்சன் கருணை என்னும் மானிட நெறியை வேறுபட்ட கோணத்திலிருந்து கவனித்துக் கதையாக்கி நம்மையும் காணச் செய்திருக்கிற திறம் தனித்துவமானது.

(தொடரும்)

சமுதாயத்தின் சிறப்புக்கூறுகளான பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் இவைகளைப் பரிமாறிக்கொள்ள மொழி ஒரு கருவியாகவும், அதே சமயத்தில் இவைகள் ஒரு மொழிக்கு ஆணிவேராகவும் இருந்து அதனை வளர்க்கின்றன என்பது கண்கூடு.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப மாறிவந்துள்ள அறிவியலின் மாற்றங்களுக்கேற்ப உலகம் இந்தத் தேவையான மாற்றங்களையும் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுக்கருத்துக்களையும் ஏற்று வளர்ந்துள்ளது. ஒரு மொழிக்கு அம்மொழியில் படைக்கப்பெறும் இலக்கண, இலக்கியங்கள் சிறப்பு செய்கின்றன. பற்பல அறிவியல் துறைகளின் வளர்ச்சியும் அந்த மொழியில் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுகிறது என்பதும் உண்மை.

தொழிற்புரட்சியின் விளைவால் புதிய கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவை மனித வாழ்வில் பெறுதற்கரிய இடத்தைப் பெற்று இயங்கி வருகின்றன. பெரும்பாலான கருவிகள் மனித உடலுழைப்பைக் குறைப்பதற்காகவும்; மனித ஆற்றலை அதிகப் படுத்துவதற்காகவும் உற்ற கருவிகளாக அமைந்தன. ஆனால் மனித நினைவாற்றல், சிந்தித்துச் செயற்படும் திறன், மதிநுட்பம் இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டு அறிவியல் உலகில் தலைக்கென்று ஒரு தலையாய, நிலையான இடத்தைப் பெற்றிருப்பது கம்ப்யூட்டர் எனப்படும் கணிப்பொறியாகும். இது இன்று பயன்படாத துறைகளோ, நிறுவனங்களோ இல்லையெனலாம். இத்தகைய ஆற்றல் வாய்ந்த கணிப்பொறிகள் மொழியாய்வுப்பணிகளில் எவ்வாறு எல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதே இக்கட்டுரையின் வாயிலாக நாம் அறிய முயல்வது.

1.1 கம்ப்யூட்டர் எனப்படும் கணிப்பொறி ஓர் விளக்கம் :

மொழியாய்வுப் பணிகளில் கணிப்பொறியின் பயன்பாடு பற்றி அறிய முற்படும்முன் கணிப்பொறி அறிவியல் பேராசிரியர் கா. செ. செல்லமுத்து அவர்கள் எழுதிய “கணிப்பொறி ஒருங்கும் பேஸிக் மொழியும்” என்ற நூலின் துணைகொண்டு கணிப்பொறி என்றால் என்ன ? என்பது பற்றியும் அதன் அமைப்புப் பற்றியும் சுருங்கக் காண்போம்.

‘கணிப்பொறி என்பது தானாகவே சிந்திக்கத் திறன் அற்ற ஒரு மின்னணுவியல் கருவி; ஆனால் சிக்கல்களுக்கு ஏற்ப மானிடர்களால் தக்கவாறு ஆணையிடப்படும்பொழுது குறிப்பிட்ட பணியை ஒருசில வினாடிகளில் மிகவும் துல்லியமாகவும், விரைவாகவும் செய்து முடிக்கும் செயலாற்றல் வாய்க்கப்

பெற்ற ஒரு கருவி. மேலும் குறிப்பிட்ட பணியைப் பல்லாயிரக் கணக்கான தடவைகள் அலுப்போ, சோர்வோயின்றித் திரும்பத் திரும்பச் செயற்படுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த, மானிடனின் ஓர் அடிமை ’ என்று வரையறுக்கலாம்.

1. 1. 1 கணிப்பொறியின் அமைப்பு :

கணிதக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப் பொறியின் முந்தைய கால அமைப்புகள் இருந்தன. அவற்றின் உச்சக்கட்ட வளர்ச்சியாக இன்றைய கணிப்பொறி விளங்குகிறது. ஒரு செய்தியைக் காட்சி அமைப்பெனில் கண்கள் வழியாகவும் ஒலி அமைப்பெனில் காதுகள் மூலமும் பெற்று அச்செய்திகள் மனித மூளையில் சேமிக்கப்பட்டுத் தேவைப்படும்பொழுது மனிதன் அவற்றைப் பயன்படுத்தும் முறையையொத்ததே கணிப்பொறியின் அமைப்பும் செயற்பாடும். இவற்றின் பாகங் களாக இடுவரலகம் (Input), விடுவரலகம் (Output), நினைவகம் (Memory), கணக்ககம் (Arthmetic unit), ஆளகம் (Control unit), முதலியன அமைந்துள்ளன. இவற்றில் நினைவகம், கணக்ககம், ஆளகம் இவை மூன்றும் சேர்ந்து மையச்செயலகமாக அதாவது மனித மூளையையொத்ததாகச் செயற்படுகிறது இக்கணிப் பொறியின் அமைப்பைக் கீழ்க்கண்ட கட்டப்படம் மூலம் தெளிவாக விளக்கலாம்.

கட்டப் படம் :



1.2. மொழியாய்வுப்பணிகளில் கணிப்பொறி :

மொழியாய்வுப்பணிகளில் கணிப்பொறி பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்படினும் கீழ்க்கண்ட ஆய்வுப்பணிகளில் கணிப்பொறி எங்ஙனம் பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

1. செய்தித்தாள்களின் உரைநடையாய்வு.
2. மொழிபெயர்ப்பில் கணிப்பொறியின் செயற்பாடு.
3. அகராதி தயாரிப்பில் கணிப்பொறியின் செயற்பாடு.

1. 2. 1 செய்தித்தாள்களின் உரைநடையாய்வில் கணிப்பொறி :

இன்று எண்ணிறந்த செய்தித்தாள்களும், வார, மாத இதழ்களும், பல்கிப்பெருகி வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் சில சற்றுக் கடின மொழிநடையிலும் சில பாமர மக்களும் புரிந்துகொள்ளும் நடையிலும் வெளிவருகின்றன. தொடர்ந்து நெடுங்காலமாக வந்து கொண்டிருக்கிற குறிப்பிட்ட செய்தித்தாளில் செய்திகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் சொற்களின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை எல்லைக்குள் அடங்கிவிடுகிறது இவற்றுள்ளும் திரும்பத்திரும்ப அதிக தடவைகள் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சொற்கள் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளைக் கணிப்பொறி மூலம் இனங்கண்டு தொகுத்து அளித்தோமெனில் அச்சுக் கோர்த்தலும் சொற்களைத்தேடும் காலவிரயமும் மிச்சமாகும். இதனால் குறிப்பிட்ட சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு நாள், நிகழ்ச்சி, நிகழ்ந்த இடம் இவைகளை மாத்திரம் மாற்றி அச்சுக் கோர்த்தல் பணியையும், அச்சிடும் பணியையும் துரிதப்படுத்தி இதழை விரைவில் வெளிக்கொணர ஏதுவாகிறது.

இக்குறிப்பிட்ட சொற்களால் அமைந்த சொற்றொடர் புழக்கத்தில்தான் இப்பத்திரிக்கை அறிவுசார்ந்தவர்களையும் பாமர மக்களையும் கவர்கிறது. இவற்றைக்கொண்டு இவைகள் இந்த இதழில்தான் இடம் பெற்றிருக்கின்றன என்றும் இனங்காண முடிகிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட செய்தியை அல்லது நிகழ்ச்சியை ஒவ்வொரு இதழும் தனக்கே உரித்தான சொற்றொடர் அமைப்பில் வெவ்வேறுவிதமான நடையில் அளிக்கின்றன. இந்த மொழிநடை வேறுபாடு, இப்பத்திரிக்கைக்கும் அறிவுசார்ந்தவர்களுக்கும் பாமரமக்களுக்கும் உள்ள தொடர்பைக் கூட்டவோ குறைக்கவோ செய்கிறது. பயன்படுத்

தப்படும் சொற்கள், சொற்புழக்கம், திரும்பத் திரும்ப பயன்படுத் தப்படும் சொற்கள் முதலியன கணிப்பொறி மூலம் அறியப்படு கின்றன.

ஒரு 'விபத்து' அல்லது 'இனக்கலவரம்' பற்றிய ஒரு செய்தி கணிப்பொறியில் பதிவு செய்யப்படுமெனில் பல வருடங்களுக்குப் பின்னர் எதிர்காலத்தில் இக்குறிப்பிட்ட விபத்து அல்லது இனக் கலவரம் பற்றிய தகவல் சேகரிக்க வேண்டுமெனில் 'இனக் கலவரம்' அல்லது 'விபத்து' என்ற தலைப்பில் அன்றைய வருடத்தில் நாட்டின் பல்வேறு இடங்களிலும் நிகழ்ந்த 'இனக் கலவரம்' பற்றிய பல்வேறு செய்திகள் முழுதும் நொடியில் கணிப் பொறிமூலம் நமக்கு அளிக்கப்படுகின்றன. இவற்றைக் கொண்டு அக்காலச்சூழலில் நிகழ்ந்த சம்பவம் பற்றித் தெளிவாக ஒரு வரலாறு தோற்றுவிக்கக் கணிப்பொறி பெரும் உதவியாக அமைகிறது.

1. 2.2. மொழிபெயர்ப்புப் பணியில் கணிப்பொறி :

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள கருத்துக் களையும், செய்திகளையும் மற்றொரு மொழிக்குப் பரிமாற்றம் செய்வதாகும். எந்த மொழியின் கருத்துக்களையும் செய்தி களையும் மொழிமாற்றம் செய்யப்போகிறோமோ அம்மொழி மூலமொழி (Source Language) என்றும் எம்மொழியில் இச்செய்தி கள் மாற்றம் செய்யப்படப் போகின்றனவோ அம்மொழி இலக்கு மொழி (Target Language) என்றும் அழைக்கப்படும்.

உதாரணமாக மொழிபெயர்ப்பு ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு எனில் ஆங்கிலம் மூலமொழியாகவும் தமிழ் இலக்குமொழியாகவும் செயற்படும்.

தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு எனில் தமிழ் மூலமொழி யாகவும் ஆங்கிலம் இலக்கு மொழியாகவும் செயற்படும். இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஒரு மொழியில் ஒரு அறிஞரின் புரட்சிகரமான, மனித சமுதாயத்திற்கு ஆக்கம் தரும் தத்துவ, சமயக் கருத்துக்கள், மதக்கோட்பாடுகள் முதலியன இன்னொரு மொழிக்கு எடுத்துச் செல்ல மொழிச்சிக்கல்கள் உள்ளன. மேலும் இக்கருத்துகள் சமுதாயத்திற்கு ஆக்கம் தரக்கூடியனவாக இருப்பினும் இவை ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களிடையே மட்டும் பரவி யிருக்கும். எனவே இவற்றை எல்லாமொழிபேசும் மக்களும்

அறிந்து பயனுறவும் இடையேயுள்ள மொழிச்சிக்கல் தீர்க்கவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக உள்ளது.

மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளர் இருமொழிப்புலமையும் பெற்றிருத்தல் மட்டுமன்றித் தெளிவாக மொழிபெயர்க்கும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவராகவும் இருத்தல் அவசியம். மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியிலிருந்து செய்திகளை இலக்குமொழிக்குப் பரிமாற்றம் மட்டும் அன்று; மூலமொழியிலுள்ள செய்திகளை ஆய்ந்து தெளிவாகப் பயின்றபின் அதன் அடிப்படைக் கருத்து மாறாமல் இலக்குமொழியின் மொழி மரபிற்கேற்ப மாற்றம் செய்தலே உண்மையான மொழிபெயர்ப்பாகும். இந்த மொழிபெயர்ப்பு நான்கு வகையாகப் பிரிக்கப் படுகின்றது.

1. மானிட முயற்சியால் நடைபெறும் மொழிபெயர்ப்பு.
2. கணிப்பொறி உதவியுடன் கூடிய மானிட மொழிப்பெயர்ப்பு
3. மானிட உதவிசார்ந்த கணிப்பொறிவழி மொழிபெயர்ப்பு
4. முற்றிலும் கருவி வழியான மொழி பெயர்ப்பு

முதல்வகை மொழிபெயர்ப்பு முற்றிலும் மானிட முயற்சியால் மேற்கொள்ளப்படுவது.

கணிப்பொறி உதவியுடன் கூடிய மானிட மொழிபெயர்ப்பில் கணிப்பொறியில் மூலமொழிச் சொற்கள் அனைத்தும் அதற்கு நிகரான பொருளுடைய இலக்குமொழிச் சொற்கள் அனைத்தும் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றின் தேவை கருதிப்பெற முயலுகையில் மூலமொழிச் சொல்லும் அதற்கு நிகரான பொருளுடைய இலக்குமொழியின் அனைத்துச் சொல்லும் கணிப் பொறி வழி தரப்படுகின்றன, இவற்றில் தரப்பட்ட மூலமொழிச் சொல்லிற்கு நிகரான இலக்குமொழிச் சொல் மொழிபெயர்ப் பாளருக்கு அறிமுகம் இல்லையென்ற போதிலும் இது தரப்படு கிறது. எனவே இவற்றில் கணிப்பொறி வழி மூலமொழிச் சொல்லுக்கு நிகரான பொருளுடைய அனைத்து இலக்குமொழிச் சொற்களும் மொழிபெயர்ப்பாளருக்குக் கிடைக்கிறது.

மானிட உதவிசார்ந்த கணிப்பொறி வழி மொழிபெயர்ப்பில் மூல, இலக்கு மொழிச்சொற்கள் கணிப்பொறியில் பதிவு செய்யப் படுகின்றன. இவற்றில் மூலமொழியிலுள்ள ஒரு சொல்லுக்குப்

பல பொருள் இருக்கும். இவற்றைக் கணிப்பொறி தருகிறது. இவற்றினைக் கொண்டு மூலமொழியில் ஒரு வாக்கியத்திற்கு நிகரான இலக்கு மொழிவாக்கியத்தை கணிப்பொறி தருகிறது. இவற்றில் மூலமொழி வாக்கியத்திற்குப் பொருந்தக்கூடிய சரியான இலக்குமொழிச் சொல்லைத் தெரிவு தெரிவு செய்து மற்ற சொற்களைத் தவிர்க்க வேண்டியது மொழி பெயர்ப்பானது வேலையாகிறது. இந்த மொழிபெயர்ப்பில் இலக்குமொழி இலக்கணப் பாங்கிற்கேற்ப வாக்கியம் அமையவில்லையெனினும் ஓரளவிற்கு மூலமொழி வாக்கியத்திற்கான பொருளமைப்பு இலக்குமொழியில் மொழிபெயர்ப்பாளனது உதவியுடன் கணிப் பொறியில் பெறப்படுகிறது.

தற்பொழுது நடைமுறைச் சாத்தியத்தில் உள்ளது முற்றிலும் கருவி வழி மொழிபெயர்ப்பாகும் இருப்பினும் இந்த எல்லா மொழிபெயர்ப்பிலும் மானிடனின் பங்கு தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

1. 2. 3. அகராதித் தயாரிப்பில் கணிப்பொறி :

மொழியாய்வின் பல்வேறு பணிகளில் அகராதி ஆக்கம் ஒரு இன்றியமையாத பணியாகும். அகராதிகள் மொழியைக் கற்பதற்கும், மொழியின் சொற்புழக்கம், கருத்துச் செறிவு, பொருள்வெறுபாடு, சொற்றொடரில் சொல் அமைந்துள்ள முறை, பயன்பாட்டு முறை முதலிய பல செய்திகளை அறிந்து கொள்ள உதவுகிறது மொழி, சொல், அமைப்பு, பயன்பாட்டு முறை இவற்றைபொட்டி ஒரு அகராதி மற்றொரு அகராதி யிலிருந்து மாறுபடுகிறது. ஒரு மொழியின் இரு கூறுகளாவன இலக்கணம் (Syntax), பொருண்மை (Semartics), முதலியவற்றினடிப்படையில் சொற்றொடர்கள் உருவாகின்றன. இவற்றினடிப்படையில் அகராதி வடிவமைக்கப்படுகின்றது. மொழி, சொல்லமைப்பு, பயன்பாட்டு முறை இவைகளின் அடிப்படையில் அகராதிகள் ஒரு மொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி எனப்பிரித்து வகைப்படுத்தப் படுகின்றன.

அகராதி தயாரிக்கும் பணியில் இருநிலைகள் உள்ளன. ஒன்று சொல், செய்திகளைத் திரட்டுதல், தொகுத்தல், வகைப்படுத்துதல், அகரநிரலாக்கம், மற்றொன்று இந்த சொற்களுக்குப் பொருள் எழுதுதல், பிறமொழிப்பதம் எழுதுதல், இலக்கணக்குறிப்பு எழுதுதல் ஆகும்.

அகராதித் தயாரிப்பில் பல்லாயிரம் நூல்களிலிருந்தும் குறிப்புக்கள், பிற அகராதிகளிலிருந்தும் சொற்களைத் தொகுத்து அவற்றில் தேவையான செய்திகளைத் தெரிவுசெய்து தொகுத்து, வகைப்படுத்தி, அகர நிரலாக்குதல் முதலியவற்றிற்கு நீண்ட காலமும், அதிகமான பொருட்செலவும், அதிக மனித ஆற்றலும் ஆகும். எனவே இப்பணிகளுக்குக் கணிப்பொறியைப் பயன் படுத்துவது மூலம் இவற்றை நாம் சேமிக்கமுடியும்.

இரண்டாவது சொற்களைப் படித்து ஆய்ந்து தெரிவுசெய்தல், அதற்குப் பொருள் எழுதுதல், இலக்கணக்குறிப்பு எழுதுதல், அதனைப் பயன்படுத்தும்முறை, இடம் இவற்றை ஆய்ந்து எழுதுதல் முதலியன நிதானமாகச் சிந்தித்துச் செய்யப்பட வேண்டிய பணிகளாகும். இவைகள் மூலமே ஒரு அகராதி தரமானதாக அமையும்.

இத்தகைய பணிகளில் கணிப்பொறி சொற்களைத் தொகுத்தல், அகர நிரலாக்கல் முதலிய பணிகளைத் துல்லிய மாகவும், தவறின்றியும் செய்து ஆய்வாளருக்கு அகராதி தொகுக்கும் பணியில் உதவி செய்கிறது.

புகழ்வாய்ந்த ஆக்ஸ்போர்டு, லத்தீன் மொழிகளுக்கான அகராதிகள் கணிப்பொறி மூலம் தொகுக்கப் பட்டவைதாம். குறிப்பாக A dictionary of scottish tongue (DOST) அகராதிப்பணி மேற்கொள்ளப்பட்ட பொழுது சுமார் 2000 லட்சங்களுக்கான சொற்கள் அமைந்த உரைகளைப் படித்துச் சொல்விளக்கம் மற்றும் செய்திகளைத் திரட்டவேண்டியிருந்தது. இப்பணியில் கணிப்பொறி சொற்களைத் தொகுக்கவும், வகைப் படுத்தவும், அகர நிரலாக்கவும் பயன்படுத்தப்பட்டது. இது போன்ற அகராதிப்பணிகளில் ஏராளமான சொற்களைப் பதிவு செய்தல், தொகுத்தல், வகைப்படுத்துதல், அகர நிரலாக்கம் செய்தல் முதலிய பணிகளில் கணிப்பொறி மிகத் துரிதமாகச் செயல்படுகிறது. தற்காலத்திய கணிப்பொறிகளில் தட்டச்சுப் பலகைகளையொத்த உள்ளீட்டுக்கருவியுள்ளது. இவற்றின் மூலம் செய்திகள் கணிப்பொறிக்கு உள்ளீடு செய்யப்படு கின்றன. பின்னர் செய்திகளிலிருந்து வார்த்தைகளைப் பிரித்தல், தொகுத்தல், வகைப்படுத்துதல், அகர நிரலாக்கல் முதலிய பணிகளை மேற்கொள்ளக் கணிப்பொறிக்குக் கட்டளை யிடப்படுகிறது. இக்கட்டளைகளைக் கணிப்பொறிக்கு இடுவதற்கு ஒரு மனிதன் மற்றொரு மனிதனோடு தொடர்பு கொள்ள மொழி பயன்படுவது போலக் கணிபொறியுடன்

தொடர்புகொள்ளச் சில மொழிகள் உருவாக்கப்பட்டுள்ளன) வழியமைப்பு (Programming Languages) மொழிகள் உள்ளன. கணிப்பொறி மூலம் பல்லாயிரம் பக்கங்களிலான செய்திகளைத் துல்லியமாகத் தவறுகள் இன்றித்தொகுக்க, அகர நிரலாக்க முடிகிறது.

1. 3. பிற பணிகளில் கணிப்பொறி :

சொல்லடைவு மற்றும் பொருளடைவு தயாரிக்கும் பணிகளில் கணிப்பொறியின் பங்கு குறிப்பிடத் தக்கதாம். ஒரு நூலாசிரியர் நூலொன்று எழுதி அதற்குப்பின்னர் அந்நூலுக்குச் சொல்லடைவு மற்றும் பொருளடைவு தயாரிக்க வேண்டுமெனில் சிறுசிறு அட்டைகளைத் தயார் செய்துகொண்டு அவற்றில் சொற்களை எழுதிப் பின்னர் அவற்றைத் தொகுத்து, வகைப்படுத்தி, அகர நிரலாக்கி இப்பணியை நிறைவேற்ற வேண்டும். இதனால் கால விரயமும், பொருட்செலவும், நிறைய மனித ஆற்றலும் தேவைப்படும் மேலும் இவற்றில் தவறுகளும் விடுபடுதலும் நிகழ வாய்ப்புள்ளது ஆனால் கணிப்பொறி இப்பணியை ஒருசில மணி நேரங்களில் மிகத் துல்லியமாகவும், துரிதமாகவும், தவறுகள் ஏதுமின்றியும் செய்து முடித்துவிடுகிறது.

1. 4. முடிவுரை :

மொழியாய்வுப் பணிகளில் மட்டுமன்றி இன்று எல்லாத் துறைகளிலும் கணிப்பொறியின் பங்கு தவிர்க்க முடியாததாகி வருகிறது. இருப்பினும் மிகுதியாக மனித ஆற்றலைச் சேமிக்கவும் தவறுகள் இல்லாத செயல்களை நிகழ்த்தவும் கணிப்பொறி உதவுகிறது. மேலும் மனிதனைப் போலல்லாது எத்தனை தடவைகள் முனைந்தாலும் அலுப்போ சோர்வோயின்றி இயங்கி மனித வாழ்விற்குப் பெருமை சேர்ப்பனவாய் இக்கணிப்பொறிகள் இயங்கிவருகின்றன என்பது உண்மை.

துணைநின்றவை :

1. கா. செ. செல்லமுத்து, “கணிப்பொறி ஒருங்கும் பேஸிக் மொழியும்” தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, செப்டம்பர் 1985.
2. கா. செ. செல்லமுத்து, “தமிழாய்வில் கணிப்பொறி ஒரு கண்ணோட்டம்” ஆய்வுக் கட்டுரை.
3. கா. செ. செல்லமுத்து, “அகராதி ஆக்கப்பணியில் கணிப்பொறி” ஆய்வுக்கட்டுரை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு

இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்ஃபில்.
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

புராணக்கருத்துக்கள் :

கலம்பகத்தில் புராணக் கருத்துக்கள் - நால்வரைப்பற்றியவை - சிறுத்தொண்டர் புராணச் செய்தி - திருவிளையாடற் புராணச் செய்திகள் - தலபுராணச் செய்திகள் - சிவபரம்பொருள் - சிவனாரின் மாவீரச் செயல்கள், பிறதேவர்களைப் பற்றிய புராணச்செய்திகள் - முனிவர்கள் அடியார்களைப்பற்றி புராணச்செய்திகள் - பிற புராணச் செய்திகள்.

> " இடைக்காலத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி எழுந்த புராண மரபுக்கதைகள் திடீரென்று கிளைத்தவை அல்ல. கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கியே அவை கால் கொண்டு உருப்பெற்றன என்பது அறியத்தகும். இக் கதைகள் சமயச் சார்புடையவை. ஒருசில சமயத் தத்துவங்களை விளக்குவன. "[1]

இப்புராண மரபுக்கதைகளை, நூலாசிரியர் திருவிடைமருதூர்க் கலம்பகத்தில் சைவசமயச்சார்புடைய நிகழ்ச்சிகளாகக் கூறுகின்றார். புராணக் கதைகள் சமயமெய்ப்பொருளை விளக்கும் பான்மை உடையன. திருவிடைமருதூர்க் கலம்பகத்தில் இடம் பெற்றுள்ள புராணச் செய்திகளும் அவ்வாறே அமைந்துள்ளன.

கலம்பகத்தில் புராணச் செய்திகள் :

சிவனாரின் அருட்செயல்களை விளக்குகின்றன. சமய குரவர் மூவரைப் பற்றிய புராணச் செய்திகள், மாணிக்க வாசகரைப் பற்றிய புராணச் செய்தி, சிறுத்தொண்டர் புராணச் செய்தி, திருவிளையாடற் புராணத்தில் சில கூறுகள் தல புராணக்கூறுகள் சிவனாரைப் பற்றிய புராணச் செய்திகள் பிற புராணக் கூறுகள் ஆகியவற்றை ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

மணிவாசகரின் திருவாசகத்தைச் சிவபெருமான் எழுதியதனால் திருத்தோள்கள் சிவந்தன என்பதைப்

" பலனரு ளணிமணி யார்துங்க வாசகர்
பகர்பனு வல்கள்வரை யாமுற் சிவந்தன " 11

எனச்சுட்டினர். பிற நூல்களினும் திருவாசகத்தில் இறைவனுக்குள்ள ஈடுபாட்டை இப்பகுதி உணர்த்துகின்றது.

சிறுத்தொண்டர் :

சிறுத்தொண்டர் புராணச் செய்தியை,

" ஏராளக் கிருபை யுள்ளா
யெனவேத மிசைத்திடநீ
சீராள னெனுமகவைத் தினவிழைந்த ததிசயமே " 12

என்றார். இப்பகுதியில், 'ஏராளக்கிருபை யுள்ளாய் என்று மறைகள் புகழ்கின்றன. ஆனால் நீயோ சீராளனை உண்ண விழைந்தாய் " என முரணித்தோன்றும் இயல்பினை வியந்து சுட்டுகின்றார்.

செந்நெற்கோட்டை :

மதுரையில் உழவர்குலத்தைச் சார்ந்த அடியார்க்கு நல்லான் என்பான் சிறந்து விளங்கினான். அவன் மனைவி உயர் பன்பினள். அவர்கள் அடியார்க்கு உணவுநல்கும் பணியைக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்குச் செல்வம் சேர்ந்தவண்ணமிருந்தது. அவர்களில் மெய்யன்பைப் புலப்படுத்த இறைவன் அவர்கள் வாழ்வில் வறுமையைக் கொடுத்தான். அடியார்க்கு நல்லான், சிவனடியார்க்கு உணவு நல்கும்பணி நின்றதே என வருந்தினான். இருவரும் இறைவனிடத்தில், " தங்கள் பணித்துணையாகக் கடன் தரக்கூடியவரைக் காட்டியருளுக. இல்லையெனில் உயிரைப்போக்குவோம் " என வேண்டினர். இறைவன் அவர்கள் இல்லத்தில் அள்ள அள்ளக் குறையாத செந்நெற் கோட்டை தோன்றுமாறு செய்தருளினான். இப்புராணச் செய்தியை,

" உளத்தின் வருத்த மகல வொருவர்க்
குலவாக் கோட்டை யளித்தவன் " 13

என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்; மெய்யன்பர்களின் (இறையன்பர்கள்) அன்புநிலையும் இறைவனின் அருள் செயலையும் இப்புராணச்செய்தி விளக்குகின்றது.

இப்பாடலடிகளுக்குக் குறிப்புரை எழுதிய
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

"ஒருவர்க்கு—குலபூடண பாண்டியனுக்கு ;
இதனை உலவாக்கிழியருளிய படலத் தானுணர்க "[14]

என்று எழுதுகின்றார்.

உலவாக்கிழியருளிய படலம் :

குலபூடண பாண்டியன் செருக்கினால் அந்தணரை மதிக்க வில்லை. நாட்டில் வறுமையேற்பட்டது. அரசன் இறைவனை வேண்டினான். பாண்டியன் கனவில் இறைவன் தோன்றி, "அறத்தை வளர்ப்பாய்; உனக்கோர் உலவாக்கிழி தருகின்றோம். நாட்டின் வறுமையைப் போக்குவாய்" எனக்கூறி ஒரு கிழியைப் பக்கத்தில் வைத்து மறைத்தார்.

அரசன் விழித்தெழுந்தான், உலவாக்கிழியைச் சிவனாராகக் கருதி வழிபட்டான். அக்கிழியால் அந்தணர்க்கும், மற்றவர்க்கும் செலவிட்டான். சோமசுந்தரன் விமானம், மீனாட்சியம்மையின் விமானம் முதலியவைகளை வேய்ந்தான். பாண்டியநாடு பல்வளம் நிறைந்து விளங்கியது. இப்புராணச் செய்தியை "உலவாக்கிழியருளிய படலத்தால்[15] அறியலாம். த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை கருத்திற்கேற்ப உளத்தின் வருத்தமகல ஒருவர்க்கு உலவாக்கிழி அருளியவன் எனப்பொருள் கொள்ள இடமுண்டாகிறது.

மாபாதகம் தீர்த்த அருள்செயல் :

தாயை விழையும் மாபாதகம் புரிந்த அந்தணன் ஒருவனை ஆட்கொள்ள இறைவன் சூதாடியாக வந்து அவன் பாவம் நீக்கினான். இத்திருவிளையாடற் புராணச் செய்தியை,

"ஆய்மருவித் தாதை கொன்றோ
னவன் பாவம் போக்கினையே "[16]

என்று குறிப்பிட்டார். இப்பகுதியால் கொடும்பாவச் செயலையும் இறைவன் மன்னிக்கின்றான் என்பதனையுணரலாம்.

தம்மைத்தாமருச்சனைச்சருக்கம் :

சிவபெருமான், சிவலிங்கத்தை அனைவரும் காணப்பூசித்தார். 'பூசைப்பயனால் பல்செல்வம் பெறுவர்' என உமையிடம் குறிப்பிட்டார். இறைவன் ஆகமவிதிகள் குறிப்பிட்டவாறு தம்மைத்

தாமே பூசித்து அனைவருக்கும் பூசனைச்சிறப்பைக் காட்டி யருளினார்.[17]

இப்புராணச்செய்தியை,

" அண்ட முண்ட விண்டாதி
யமரர்தம தெணம் வாய்ப்பக்
கண்டர்ச்சிப்பார் நினைநீ
கண்டர்ச்சித் திட்டதென்னோ "[18]

என்கின்றார் நூலாசிரியர். இப்பகுதி வழிபாட்டின் இன்றியமையாச் சிறப்பை எடுத்துக்கூறுகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்)- " தொன்மைமிக்க தமிழ்ப்புராண மரபுக்கதைகள் ", வையை. 3, ப. 416.
2 திரு ம. கலம் , பா. 101
3. மேற்படி., பா . 4.
4. மேற்படி , பா. 4.
5. மேற்படி., பா. 101.
6. மேற்படி., பா. 4
7 மேற்படி., பா. 1.
8. மேற்படி , பா. 4.
9. மேற்படி., பா. 1.
10 மேற்படி., பா. 16.
11. மேற்படி , பா 4.
12 மேற்படி , பா. 1.
13. மேற்படி,, பா. 19.
14. த. ச மீனாட்சி சுந்தரம்பிள்ளை, (கு. ஆ.) திரு. ம. கலம்., பா. 19.
15. திருவிளையாடற்புராணம் (கதைச்சுருக்கம்), உலவாக்கிழி யருளிய படலம், பக் 38-39.
16 திரு. ம. கலம் பா. 1.
17. த ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, திருவிடைமருதூர்த் தல புராண வரலாற்றுச் சுருக்கம், பக். 22-23.
18. மேற்படி , பா, 1.

(தொடரும்

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	6	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர்—நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4	00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ.	40	00
சொல்லதிகாரம்	ரூ.	45	00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	7	50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திரு/திரு நூலகர்,

அவர்கள்

அரசினர் கீழ்த்திசைச்

சுவடிகள் நூலகம்

சென்னை

600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30	00	60	00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுவோர்: திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி, ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி, தஞ்சாவூர் - 613 009.